# போதி தர்மர் முதல் ஜேம்ஸ்பாண்ட் வரை
## அரவிந்த் சச்சிதானந்தம்

Aravindh Sachidanandam

Second Edition- July 2014

First Edition- December 2012

Copyright 2014  Aravindh Sachidanandam

Cover Image Copyright Premkumar Sachidanandam

# போதிதர்மர் முதல் ஜேம்ஸ்பாண்ட் வரை


என்னுரை

ஸ்கைஃபாலும் ஜேம்ஸ் பாண்ட்டின் ஆளுமையும்

பீட்சா

பர்ஃபி

மாற்றான்

முகமூடி

பில்லா II ஒரு பார்வையும், தமிழ் ரசிகர்களுக்கு சில வேண்டுகோள்களும்

வழக்கு எண் 18/9

அரவான்

மயக்கம் என்ன

7 ஆம்அறிவு

# என்னுரை

வணக்கம்...

ஒரு படத்தை பற்றிய விமர்சனம் அந்த படத்தை எந்த வகையிலும் பாதிக்கப் போவதில்லை. படம் பார்ப்பவர்கள் பார்த்துக் கொண்டுதான் இருப்பார்கள். பார்க்க விரும்பாதவர்கள் எந்த காலத்திலும் பார்க்கப் போவதில்லை. ஆனால் முத்தாய்ப்பாக வரும் நல்ல படங்களை கொண்டாடவேண்டிய கடமை நமக்கிருக்கிறது. அதை சமயத்தில் பில்ட்-அப்போடு வந்து ஊரை ஏமாற்ற முயற்சிக்கும் படங்களை அலச வேண்டிய பொறுப்பும் நமக்கிருக்கிறது. கால புத்தகத்தில் படங்களின் இருப்பை பற்றிய கருத்துக்களை பதிவு செய்யவேண்டியது ரசிகர்களின் கடமை...

இங்கு ரசிகர்கள் என்று குறிப்பிடப்படுபவர்கள், திரைப்படங்களின் ரசிகர்கள். நடிகர்களின் ரசிகர்கள் அன்று. உலக திரைப்படங்களை எந்தவொரு 'ஓரவஞ்சனை'யும் இல்லாமல் பார்க்கும் ரசிகன் என்ற முறையில் இங்கு இந்த விமர்சனங்களை பதிவு செய்கிறேன்.

இவை வெறும் திரைப்பட விமர்சனங்களன்று. உலகத் திரைப்படங்களைப் பற்றி ஆழ்ந்த புரிதல் கொண்ட ஒரு ரசிகனின் கருத்துக்கள். விமர்சனங்களினூடே திரைக்கதை உத்திகள், சினிமாவைப் பற்றி ஒரு சராசரி ரசிகனுக்கு இருக்க வேண்டிய புரிதல்கள், எந்த வகையான சினிமாவை ஏற்றுக்கொள்வது, எந்த வகையான சினிமாவை நிராகரிப்பது போன்ற கருத்துக்கள், என பல்வேறு விடயங்களைப் பற்றி விவாதித்துள்ளேன்.

பல்வேறு நேரங்களில் பல்வேறு களங்களில் வெளியான திரைக் கட்டுரைகளின் தொகுப்பு இது. படியுங்கள். பகிருங்கள்.

அன்புடன்
அரவிந்த சச்சிதானந்தம்
எழுத்தாளர், திரைக்கதை ஆலோசகர்
சென்னை, இந்தியா
www.aravindhskumar.com
aravindhskumar@gmail.com
12.12.2012

# ஸ்கைஃபாலும் ஜேம்ஸ் பாண்ட்டின் ஆளுமையும்

'ஜேம்ஸ் பாண்ட்' கதாப்பாத்திரம் திரையில் உலவத் தொடங்கி இந்தாண்டோடு ஐம்பது வருடம் நிறைவு பெறுகிறது. மிகுந்த எதிர்ப்பார்புகளுக்கிடையே இந்தாண்டு வெளிவந்துள்ள "ஸ்கைஃபால்", பாண்ட் வரிசையில் இருபத்திமூன்றாவது படம்.

இங்கிலாந்து உளவுத்துறை அதிகாரி ஜேம்ஸ் பாண்ட்டின் அசத்தலான சாகசங்கள் இந்தப் படத்திலும் தொடர்கிறது. அரசாங்க இரகசியங்கள் அடங்கிய ஒரு ஹார்ட்டிஸ்க் திருடு போய்விடுகிறது. அதை கண்டு பிடித்து கொடுக்கும் பொறுப்பு ரகசிய ஏஜன்ட் ஜேம்ஸ் பாண்ட் 007-யிடம் வந்து சேர்கிறது. ஹார்ட் டிஸ்க்கை தேடி ஜேம்ஸ் பாண்ட் துருக்கி செல்ல, அங்கே எதிர்பாராத ஒரு சந்தர்ப்பத்தில் அவர் கொல்லப்படுகிறார். முதல் காட்சியிலேயே கதாநாயகனை கொன்று விட்டார்களே என்று அனைவரும் ஆச்சர்யமாக பார்த்துக் கொண்டிருக்க, உளவுத்துறை அலுவலகம் தாக்கப்பட்டு பலர் உயிர் இழக்கின்றனர். ஹார்ட் டிஸ்கில் இருக்கும் ரகசியங்களை ஒவ்வொன்றாக யாரோ இணையத்தில் வெளியிட, செய்வதறியாது தவித்து நிற்கிறது உளவுத்துறை. அந்நேரத்தில் ஆபத்பாந்தவனாய் மீண்டும் வந்து சேர்கிறார் பாண்ட், ஜேம்ஸ் பாண்ட்.

தான் இறக்கவில்லை என்றும், தலைமறைவாக இருந்ததாகவும் விவரிக்கிறார் பாண்ட். ஒரேடியாக தலைமறைவாக இருந்துவிடாமல், ஆபத்துகள் நிறைந்த உளவுத்துறை பணிக்கு ஏன் மீண்டும் வந்தாயென அனைவரும் வினவ, நாடு ஆபத்திலிருக்கும் போது தான் ஒளிந்துக் கொள்வது உசிதமாகாதென்றும், தனக்கு தேசப்பற்று அதிகமென்றும் பாண்ட் சொல்வது 'நச்'.

ஹார்ட் டிஸ்க்கை திருடியவன் ஒரு தீவில் ஒளிந்திருப்பதை தன் பல யுக்திகளை பயன்படுத்தி கண்டுபிடிக்கிறார் பாண்ட். அங்கு சென்றதும்தான் தெரிகிறது முன்னால் ரகசிய உளவாளி சில்வா தான் அனைத்து சதிச்செயல்களுக்கும் காரணமென்று. அவனோடு சண்டையிட்டு அவனை கைது செய்து லண்டன் சிறையில் அடைக்கிறார் பாண்ட். அங்கிருந்து தப்பிக்கும் சில்வா உளவுத்துறை தலைவியை கொலை செய்ய திட்டமிடுகிறார். இதையறிந்து மீண்டும் களத்தில் குதிக்கிறார் பாண்ட். பெரும் திறமைசாலியான சில்வாவிடமிருந்து உளவுத்துறை ரகசியங்களையும், தலைவியையும் எப்படி பாண்ட் காக்கிறார் என்பதே மீதிக் கதை.

துருக்கியில் பிரமாண்டமான ரயில் சண்டையோடு தொடங்குகிறது படம். பின் படம் முழுக்க பிரமாண்டத்திற்கு பஞ்சமேயில்லை. சண்டைக் காட்சிகளோடு பாண்ட் படங்களுக்கே உரித்தான நகைச்சுவையும் படத்தில் இழையோடுவவதால், இறுதிவரை தொய்வின்றி கதை நகர்கிறது.

இந்தபடத்தில் பாண்ட் வேடம் பூண்டிருப்பவர் டேனியல் கிரேக் (Daniel Craig). இதற்க்கு முன் அவர் பாண்டாக நடித்த இரண்டு படங்களை விட இப்படத்தில் அருமையாக நடித்துள்ளார். இவர் இந்தப் படத்தில் செய்திருக்கும் பல ரிஸ்கான சண்டைக்காட்சிகளின் மூலம், மற்ற பாண்ட்களை விட தனித்து நிற்கிறார்,

இது வரை வந்த பாண்ட் பட வில்லன்களிலேயே மிகவும் புத்திசாலியான வில்லன் சில்வா தான். கம்ப்யூட்டர் ஹாக்கிங் முதல் பாம்ப் வைப்பது வரை அனைத்தையும் வெகு சாதாரணமாக செய்கிறார். தன் ஹாக்கிங் திறமைமூலம் அரசாங்கத்தையே திணறடிக்கிறார். சில்வா கதாபாத்திரத்தில் சிறப்பாக நடித்திருப்பவர் ஜேவியர் பர்டெம். சிறந்த நடிகருக்கான விருதுகளை பல முறை குவித்தவர். இந்த படத்திற்கும் அவருக்கு பல விருதுகள் காத்துக்கொண்டிருக்கிறது.

படத்தை இயக்கியிருப்பது ஆஸ்கார் விருதுப் பெற்ற இயக்குனர், சாம் மென்டிஸ். அவரின் திறமைக்கு இப்படம் இன்னும் ஒரு சான்று. படத்தின் மிகப் பெரிய பலம் ஒளிப்பதிவு. மேம்பாலங்கள், அருவிகள், ரயில் பெட்டிகள், நீர் நிலைகள் என அனைத்து மூளை முடுக்குகளிலும் புகுந்து ஒளிப்பதிவு செய்துள்ளார் ரோஜர் டீக்கின்ஸ். இவர் உலகின் தலைசிறந்த படங்கள் பலவற்றிற்கு ஒளிப்பதிவு செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படத்தில் காட்டப்படும் சுரங்கப்பாதை, பாதாள அரை, பிரம்மாண்ட வீடுகள் போன்றவை உண்மை போல் காட்சியளித்தாலும், அவை பிரபல கலைஇயக்குனர் டென்னிஸ் காஸ்னரின் தனித்திறமையில் உருவான செட்டுகள் என்றறியும் போது ஆச்சர்யப்படாமல் இருக்கமுடியவில்லை. பல திறமைசாலிகள் கூட்டு சேர்ந்து “ஸ்கைஃபால்” திரைப்படத்தை திறம்பட செதுக்கிவிட்டனர்.

இது பாண்ட் படங்களின் அரை சென்ட்சுரி வருடமென்பதால், பழைய பாண்ட் படங்களை நினைவு கூறும் வகையில் சில காட்சிகளை அமைத்துள்ளனர். குறிப்பாக மிகவும் பிரபலமான பாண்ட் தீம் ம்யுசிக்கையும், அவரின் பழைய காரையும் இந்தப் படத்திலும் பயன் படுத்தி கைதட்டல்களை அள்ளுகின்றனர். மொத்தத்தில் தனக்கு நிகர் தான் தான் என்று ஸ்கைஃபால் படத்தின் மூலம் மீண்டும் ஒரு முறை நிருபித்துவிட்டார் பாண்ட்.

*

அயன் ஃபிளெம்மிங் (Ian fleming) என்ற பிரபல ஆங்கில எழுத்தாளர் உருவாக்கிய கதாபாத்திரமே ஜேம்ஸ் பாண்ட். அவர் 1952-ஆம் வருடம் எழுதிய ‘காசினோ ராயல்’ என்ற நாவலில் தான் ஜேம்ஸ் பாண்ட் முதன்முதலில் உலாவருகிறார். பிரிட்டிஷ் உளவுத்துறையிலும், பத்திரிகை துறையிலும் ஃபிளெம்மிங் பணிபுரிந்ததால், உளவுத்துறை பின்னணியில் அமைந்த பாண்ட் கதைகளை அவரால் தத்ரூபமாக எழுதமுடிந்தது. மேலும் தான் நிஜவாழ்க்கையில் சந்தித்த பல உளவாளிகளின் குணாதிசியங்களை அடிப்படையாக கொண்டே பாண்ட் கதாப்பாத்திரத்தை உருவாக்கியாதாக அவர் குறிப்பிடுகிறார்.

அக்கதைகள் வெளிவந்த சில ஆண்டுகளிலேயே மிகவும் பிரபலமாக, 1962-ஆம் ஆண்டு, முதல் பாண்ட் திரைப்படம் வெளியானது. ஃபிளெம்மிங்கின் “Dr.No” என்ற நாவலை தழுவி குறைந்த செலவில் எடுக்கப்பட்ட அந்த படம் பெருமளவு ரசிகர்களை

ஈர்க்கவே, ‘பாண்ட் சீரிஸ்’ பிறந்தது. அன்று முதல் இன்று வரை 50 வருடங்களாக பாண்ட் இன்னும் ரசிகர்களை ஈர்த்துக் கொண்டேயிருக்கிறார்.

ஃபிளெம்மிங்கின் மறைவிற்கு பின் பலர் பாண்ட் நாவல்கள் எழுதிவிட்டனர். அந்நாவல்களைத் தழுவி பல திரைப்படங்களும் எடுத்தாகிவிட்டது. ஆனால் பாண்ட் கதாப்பாத்திரத்தின் தந்தை ஃபிளெம்மிங் என்பதால், அவருக்கு மரியாதை செய்யும் பொருட்டு இன்று வரை பாண்ட் திரைப்படங்களின் டைட்டிலில் ஃபிளெம்மிங்கின் பெயரே முதலில் இடம்பெறும்.

உலகின் முதல் பாண்ட் திரைப்படத்தில் பாண்ட் கதாப்பாத்திரத்தை ஏற்றவர் சீன் கன்னேரி (Sean Connery). அவரோடு சேர்த்து இதுவரை ஆறு வெவ்வேறு நடிகர்கள்- ஜார்ஜ் லேசன்பை (Geroge Lasenby), ரோஜர் மூர் (Roger moore), திமோத்தி டால்டன் (Timothy Dalton), பியர்ஸ் பிரான்சன் (Pierce Bronson), டேனியல் கிரேக்- பாண்ட் கதாப்பாத்திரத்தில் நடித்து விட்டனர். ஆனால் பல கோடி ரசிகர்களை கொள்ளைக்கொண்ட பாண்ட் நடிகர்கள் இருவர், ஒருவர் சீன் கன்னேரி. இன்னொருவர் ரோஜர் மூர். அந்த வரிசையில் இப்போது டேனியல் கிரேக்கும் இடம்பிடுத்துவிட்டார் என்று சொல்லலாம். அந்த அளவிற்கு அவர் ஸ்கைஃபால் படத்தின் மூலம் பாண்ட் கதாப்பாத்திரத்திற்கு புது மெருகேற்றியுள்ளார்.

இதுவரை வெளிவந்த 23 பாண்ட் படங்களில். அதிக படங்களில் நடித்தவர் ரோஜர் மூர், மொத்தம் ஏழு படங்கள். ஜார்ஜ் லேசன்பை, ‘On Her Majesty’s Secret Service’ என்ற ஒரே ஒரு படத்தில் மட்டும் பாண்டாக நடித்துவிட்டு ஒதுங்கிக் கொண்டார். பாண்ட் படங்களிலேயே அதிக விமர்சனத்திற்கு உள்ளான படமும் இதுவே.

உலகளவில் ஜேம்ஸ் பாண்ட்டிற்கு இருக்கும் ரசிகர்கள் ஏராளம். அவர் அன்றுதொட்டு இன்றுவரை ‘பாண்ட். ஜேம்ஸ் பாண்ட்’ என்ற ஒற்றை வரி பஞ்ச் வசனத்தையே பேசினாலும், துளிக்கூட சலிப்பு ஏற்படுவதில்லை என்பதற்கு திரையரங்கில் பறக்கும் கைதட்டல்களே சான்று.

இங்கிலாந்து கதாப்பாத்திரமான ஜேம்ஸ் பாண்ட்டிற்கு அந்த நாட்டில் எண்ணற்ற ரசிகர்கள் இருப்பது ஆச்சர்யமில்லை. ஆனால் இங்கிலாந்திற்கு இணையாக இந்தியாவிலும் பாண்டிற்கு ரசிகர்கள் இருப்பதே அனைவரின் புருவத்தையும் விரியவைக்கிறது. இயல்பாகவே இந்தியர்களுக்கு அக்ஷன் படங்கள் என்றால் கொள்ளை பிரியம். அதனால்தான் ப்ருஸ்லீ, ஜாக்கிசான், ஜேம்ஸ் பாண்ட் என அனைவரின் படங்களும் இங்கு சக்கைப்போடு போடுகின்றன. இதில் கவனிக்கத் தகுந்த விடயமொன்றுண்டு. ப்ருஸ்லீயும், ஜாக்கிசானும் கதாநாயகர்கள். ஆனால் பாண்ட் ஒரு கதாபாத்திரம். அந்த கதாப்பாத்திரத்தில் யார் நடித்தாலும் படம் வெற்றிப் பெற்றுவிடுகிறது. அந்த அளவிற்கு பாண்ட் இந்திய ரசிகர்களை ஈர்த்துள்ளார் என்றால் அது மிகையல்ல.

இங்கிலாந்து, இந்திய ரசிகர்கள் மட்டுமல்லாது உலக ரசிகர்களையும் பாண்ட் கவர்ந்ததற்கு இன்னொரு காரணம், அவர் ஒரு சராசரி மனிதர் என்பதே. பேட்மேன், சூப்பர்மேன் போன்று பாண்ட் சூப்பர் ஹீரோ அன்று. அவர் ஒரு சராசரி உளவாளி. எந்த ஒரு அமானுஷ்ய சக்தியின் உதவியுமின்றி அவர் தீயவர்களை அழிக்கிறார். அவருக்கு உதவியாக இருப்பது ஒரு துப்பாக்கி மட்டுமே. மற்ற திரைப்பட கதாபாத்திரங்களைவிட, ரசிகர்களின் மனதில் பாண்ட் ஆளுமை செலுத்துவதற்கான காரணமும் இதுவே.

பிரபல இணையதளம் 'Askmen.com' நடத்திய 'World's 49 most influential men-2012' என்ற கருத்துக்கணிப்பில் பாண்ட் முதலிடம் வகிக்கிறார். இதில் ஆச்சரியப்படக் கூடிய விடயமென்னவெனில், 49 நபர்களில் 48 பேர் நிஜ மனிதர்கள். பாண்ட் ஒரு கற்பனைக் கதாப்பாத்திரம்.

கலாச்சார ரீதியாகவும் பாண்டின் ஆளுமை குறிப்பிடத்தக்கது.. மேற்கத்திய நாடுகளில் கொண்டாடப்படும் ஹாலோவீன் திருவிழாக்களில் பாண்ட் வேடம் பூணுவது இன்றுவரை பிரபலமாக உள்ளது. மற்ற மாருவேடங்களை விட பாண்ட் வேடம் அனைவராலும் விரும்பப்படுவதற்க்கு காரணம், அவ்வேடம் பூணுவது மிகமிக எளிது. ஒரு பொம்மைத்துப்பாக்கியும், ஒரு கோட்டும் இருந்தால் போதும். பாண்டாக மாறிவிடலாம்.

ரசிகர்களின் ஆதரவு ஒரு புறமிருக்க, வருமானம் ஈட்டுவதிலும் பாண்ட் படங்களுக்கு இணை வேறில்லை. பலாயிரம் கோடி டாலர்களை இதுவரை பாண்ட் படங்கள் ஈட்டியுள்ளது, அதனால்தான் மீண்டும் மீண்டும் தடையின்றி பாண்ட் படங்கள் வந்துக் கொண்டிருக்கின்றன. பாண்ட் கதாப்பாத்திர தேர்வு ஏதோ வல்லரசுநாடுகளின் அதிபர் தேர்வுக்கு இணையாக நடத்தப்படுவதற்கு காரணம், உலகளவில் பாண்டின் மவுசு இன்னும் குறையாததே.

வருமானம் ஈட்டுவதில் பாண்டின் சாகசங்களை பாண்டால் தான் தோற்கடிக்க முடியும் என்பதில் யாருக்கு மாற்றுக் கருத்தில்லை. இது வரை வந்த படங்களைவிட ஸ்கைஃபால் மிகவும் வேகமாக வருமானம் ஈட்டிக் கொண்டுவருவதால், அதிக வருமானம் ஈட்டிய பாண்ட் வரிசையில் கூடிய விரைவில் டேனியல் கிரேக் முதலிடம் பிடித்து விடுவார்.

ஐம்பது ஆண்டுகளில் பாண்ட் கதாபாத்திரம் பல வகையான மாற்றங்களை சந்தித்துள்ளது. இடைக்காலத்தில் வந்த பாண்ட்கள் பறக்கும் கார்கள், அட்வான்ஸ்ட் வெப்பன்கள் போன்றவற்றை உபயோகித்தனர். ஆனால் ஸ்கைஃபால் திரைப்படத்தில் பாண்ட் மீண்டும் ஒரு சராசரி மனிதானாக உருவெடுத்துள்ளார். இப்படத்தில் இவர் பயன்படுத்தும் ஆயுதம் வெறும் துப்பாக்கியும், கத்தியும் மட்டுமே. இது பாண்ட் கதாப்பாத்திரத்தின் மீதிருக்கும் பிரம்மிப்பை அதிகரிக்கிறது.

ஆஜானுபாகுவான தோற்றம், மிடுக்கான நடை, அளவான பேச்சு, அளவற்ற அக்ஷன்- இதுவே பாண்டின் அடிப்படை குணாதிசியங்கள். அந்த குணாதிசியங்கள் டேனியல் கிரேக்கிற்கு, அவரின் முந்தைய படங்களைவிட, மிகவும் சிறப்பாக பொருந்திவிட்டது. அதனால் ஸ்கைஃபால் திரைப்படம் பாண்ட் கதாப்பாத்திரத்திற்கு புதியதொரு

பரிமாணத்தை கொடுத்துவிட்டது. அதற்க்கு இந்த ஒட்டு மொத்த படக்குழுவின் உழைப்பே காரணம். புதிய பரிமாணத்தோடு இனி வரப் போகும் தலைசிறந்த பாண்ட் படங்களுக்கு ஸ்கைஃபால் திரைப்படமே முன்னோடி எனலாம்.

அரை நூற்றாண்டாக தொடரும் பாண்டின் சகாப்தம் இதோடு முடியப் போவதில்லை. நிச்சயம் மீண்டும் வருவார், பாண்ட். ஜேம்ஸ் பாண்ட்...

## பீட்சா

பீட்சா டெலிவரி இளைஞன்,மைக்கேலாக விஜய் சேதுபதி.அவரின் காதலி, அனுவாக, ரம்யா நம்பீசன். இருவரும் ஒரே வீட்டில் வசிக்கின்றனர். மனோத்தத்துவ படிப்பை பல அரியர் வைத்து படிக்கும் அனுவிற்கு பேய் கதைகள் எழுதுவதென்றால் கொல்லைப் பிரியம். மைக்கேலோ 'பேய்' என்ற வார்த்தையை கேட்டாலே வெகு தொலைவில் ஓடி விடும் அளவிற்கு பயந்தாங்கொள்ளி. பல பேய்க் கதைகளை சொல்லி மைக்கேலை பயமுறுத்துவது அனுவிற்கு பிடித்த ஒரு விளையாட்டு.

இந்நிலையில் பீட்சா டெலிவரி  செய்ய ஒரு நாள் கடையிலிருந்து கிளம்பும் மைக்கேல் மிகவும் அலங்கோலமான நிலையில் திரும்பி வர, என்ன ஏது என்று கடையின் முதலாளி பதற மைக்கேல் நடந்த கதையை விவரிக்கிறார்.

மைக்கேல் சொல்லும் பேய் கதை, மூட நம்பிக்கையில் திளைத்த அந்த முதலாளியை மட்டும் பயமுறுத்தவில்லை, தியட்டரில் படம் பார்க்கும் ஒவ்வொருவரையும் பயமுறுத்துகிறது.

'ஸ்மிதா ஹவுஸ்' எனப்படும் ஒரு பெரிய வீட்டிற்கு பீட்சா டெலிவரி செய்ய செல்லும் மைக்கேல், பீட்சாவை அந்த வீட்டின் முதலாளி ஸ்மிதாவிடம் கொடுத்துவிட்டு பணத்திற்காக காத்திருக்கிறார். மாடிக்கு சென்ற ஸ்மிதா வெகு நேரமாகியும் திரும்பி வராததாலும், கரண்ட் கட்டானதால் தனியாக இருட்டில் காத்திருக்காக விரும்பாததாலும் மைக்கேல் மாடி நோக்கி செல்கிறாள். அங்கு ஸ்மிதாவின் பிணம் மட்டுமே கிடக்கிறது. திடுகிட்ட மைக்கேல் அங்கிருத்து தப்பிக்க முயற்சிக்க வீட்டின் கதவு தானாக பூட்டிக் கொள்கிறது.

இயல்பாகவே பயந்த சுபாவம் கொண்ட மைக்கேல் பூட்டிய வீட்டிற்க்குள் தனியாக சிக்கிக் கொண்டு, பயந்து நடுங்கி பார்வையாளர்களையும் பயமுறுத்துகிறார். மைக்கேல் உதவிக்காக காத்திருக்க, ஸ்மிதாவின் கணவர் பாபி வந்து வீட்டின் கதவை தட்டுகிறார். தான் காப்பற்றப் பட்டு விட்டோம் என்ற நம்பிக்கையில், மைக்கேல் கதவை திறக்க முயற்ச்சிக்க வீட்டின் உள்ளிருந்து துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்கிறது. பயந்தாவாறே உள்ளே செல்லும் மைக்கேலுக்கு மீண்டும் காத்திருக்கிறது அதிர்ச்சி, உள்ளே பாபியும் பிணமாக கிடக்கிறார். அங்கே உறைந்து நிற்பது மைக்கேல் மட்டுமல்ல, பார்வையாளர்களும் தான்.

ஒரு வழியாக தப்பி மைக்கேல் தன் வீட்டிற்க்கு வந்து பார்க்க அங்கே அவரின் காதலியை காணவில்லை. நடந்த அனைத்தையும் தன் முதலாளியிடம் சகாக்களிடமும் மைக்கேல் சொல்ல பயம் அவர்களையும் தொற்றிக்கொள்கிறது.

இறுதியில் அனுவிற்கு என்ன ஆயிற்று, மைக்கேல் சொல்லியே கதை உண்மையா, என்பன போன்ற பல கேள்விகளுக்கு திகிலாக பதில் சொல்லி நம்மையும் திகிலடைய வைக்கிறது பீட்சா.

அரவிந்த் சச்சிதானந்தம்

‘பீட்சா’ படத்திற்கு டிக்கெட் இருக்காவென்று அந்த பிரபல திரையரங்கில் வினவியபோது, “இந்த படத்துக்கெல்லாம் 5 நிமிஷம் முன்னாடி வந்தாலே போதும்..டிக்கெட் கிடைக்கும்” என்பதுதான் பதிலாக வந்தது. அருகில் மாற்றான் படத்தின் கட்அவுட் பிரம்மாண்டமாக மிரட்டிக்கொண்டிருந்தது…

இதை வெறும் ஒரு டிக்கெட் விநியோகஸ்த்தரின் பதிலாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. சிறு படங்களின் மேல் படர்ந்துள்ள தமிழ் சமுகத்தின் பார்வையின் வெளிபாடே அந்த டிக்கெட் விநியோகஸ்த்தரின் பதில்..

“இவனுங்கெல்லாம் என்ன படம் எடுத்திடப் போறானுங்க” “இந்த படமெல்லாம் எங்க ஓடப் போகுது “ என்பன போன்ற பார்வை..

இது போன்ற அனைத்து ஓரவஞ்சனை பார்வைகளையும் ஒரேயடியாக ஒதுக்கித் தள்ளி தனித்து நிற்கிறது ‘பீட்சா’…

இந்திய சினிமாவில் எடுக்கப் படும் thriller படங்கள் மிகக் குறைவு,. அதுவும் தமிழ் சினிமாவில் மிக மிகக் குறைவு.

தமிழ் சினிமாவில் Thriller படமென்றால், ஒருவர் கொலை செய்துக் கொண்டு திரிவார். கத்தியை க்ளோஸ்-அப்பில் காட்டியே பயமுருத்த முயற்சிப்பார்கள். Horror படமென்றால் செத்து போன மருமகள் வந்து பழி வாங்குவார். இது போன்ற படங்கள் தன் பணியை எந்த வகையிலும் ஒழுங்காக செய்யாது, எந்த ஒரு பயத்தையும் ஏற்படுத்தாது. அதை இரண்டாம் முறை பார்க்க முயற்சித்தால் சிரிப்புதான் மிஞ்சும். பல நேரங்களில் திர்ல்லராக எடுக்கப் பட்ட படங்கள் கேலிப் படங்களாகவே தொனிக்கும்.

ஆனால் முதல் முறையாக தமிழ் சினிமாவில் ஒரு முழு நீள த்ரில்லர் எடுக்கப் பட்டுள்ளதென்றால் , அது ‘பீட்சா’ தான்.

Gripping திரைக்கதை, காட்சிகளுக்கு மேலும் வலு சேர்க்கும்-பயம் சேர்க்கும் பின்னணி இசை, மிரட்ட வைக்கும் ஒளிப்பதிவு, கதாப்பாத்திரங்களின் அருமையான நடிப்பு என அனைத்தும் சேர்ந்து இப்படத்தை ஒரு Perfect Seat Edge Thriller-ஆகா மாற்றியுள்ளது…

நல்ல படங்கள் வெளிவரும்போது ஆதரிக்காமல் விட்டுவிட்டு, பின் அந்த படம் எங்காவது விருது வாங்கும் போது வாயை பிளந்துக் கொண்டு பார்ப்பதில் எந்த அர்த்தமும்மில்லை. ஆரண்ய காண்டம், தென்மேற்கு பருவகாற்று போன்ற தரமான படங்களுக்கு தமிழ் ரசிகர்கள் சரியான நியாயம் செய்திடவில்லை..

முத்தாய்ப்பாக வரும் படங்களை திரையரங்கிற்கு சென்று பார்க்காமல், தமிழ் சினிமாவில் நல்லப் படங்களே எடுப்பதில்லை என்று சொல்வது ஏற்புடையதாகாது..

இது வரை தமிழ் சினிமாவில் ‘பீட்சா’ போல் ஒரு தரமான த்ரில்லர் வந்ததில்லை..

இனிமேல் வரப்போகும் தரமான தமிழ் த்ரில்லர் படங்களுக்கு முன்னோடியாக அமைந்துள்ள 'பீட்சா'´திரைப்படத்தை வெற்றி பெற வைக்க வேண்டிய கடமை ரசிகர்களுடையது....

'பீட்சா' போன்ற நல்ல படங்களை ஆதரிக்கத் தவறினால், 'சகுனி' 'சிறுத்தை' போன்ற உலகத் தரமான படங்கள் பல வந்துக் கொண்டிருக்கும். அதைப் பார்த்து நாமும் கைத்தட்டிக் கொண்டிருப்போம்...

அரவிந்த் சச்சிதானந்தம்

## பர்ஃபி

எதிர்பார்ப்புகள் ஏமாற்றமளிக்கும் என்பதற்கிணங்க, மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் வந்த பல திரைப்படங்கள் தோல்வியை தழுவியது நமக்கு நினைவிருக்கலாம். ஆனால் சில படங்கள் மட்டுமே எதிர்பார்த்ததைவிட பல மடங்கு சிறந்ததாக அமைந்து கால புத்தகத்தில் தனக்கென்று ஒரு இடத்தை நிரந்தரமாக பிடித்துக் கொள்ளும்.அவ்வாறான ஒரு படமே 'பர்ஃபி'.

இந்த படத்தின் ட்ரைலரே பல வகையான எதிர்பார்ப்புகளை உருவாக்கியது. பாலிவுட்டின் முன்னணி கதாநாயகிகள் எல்லாம் கவர்ச்சி பாதையை தேர்ந்தெடுத்து நடித்துக் கொண்டிருக்க, கவர்ச்சியாக நடித்துக் கொண்டிருந்த பிரியங்கா சோப்ரா மனநலம் குன்றிய பெண்ணாக நடித்திருக்கிறார், டார்க் (Dark) கதைகளை மட்டுமே படமாக்கிக் கொண்டிருந்த அனுராக் பாசு முதல் முதலாக ஒரு 'ஃபீல் குட்' (feel good ) படத்தை எடுத்திருக்கிறார் என்பன போன்ற பல விடயங்கள் ட்ரைலரில் தெளிவாக தெரிந்தது.

அதே சமயத்தில் பிரெஞ்சு திரைப்படமான அமிலியின்(Amelie) பின்னணி இசையை அப்பட்டமாக 'பர்ஃபி'' ட்ரைலரில் உபயோகித்திருப்பதையும், அமிலியை போல் 'கலர் கிரேடிங்'' (Color Grading) செய்யப்பட்டிருப்பதையும் கண்டதும் ஒருவேலை அந்த பிரெஞ்சு படத்தைதான் ரீமேக் செய்துவிட்டார்களோ என்ற சந்தேகமும் எழாமல் இல்லை. எல்லாக் சந்தேகங்களுக்கும் தனக்கே உரித்தான பாணியில் விடை சொல்லி இதயத்தை வருடுகிறான் 'பர்ஃபி''.

டார்ஜிலிங்கில் வசிக்கும் ஏழை மாற்றுத்திறனாளி பர்ஃபி. வாய் பேச காது கேட்க இயலாதவர். அவ்வூரிற்க்கு குடி பெயரும் வசதி படைத்த குடும்பத்தைச் சார்ந்த பெண்ணான ஸ்ருதிக்கும் பர்ஃபிக்கும் காதல் மலர்கிறது. ஸ்ருதி ஏற்கனவே திருமணம் நிச்சயமானவரெனினும் பர்ஃபியின் குணாதிசயங்களை கண்டு தன் மனதை பர்ஃபியிடம் பறிகொடுக்கிறார். வழக்கமாக எல்லாக் காதலுக்கும் தடையாக நிற்கும் அந்தஸ்த்து இவர்கள் காதலுக்கும் பெரும் தடையாக வந்து நிற்க, ஸ்ருதி தனக்கு நிச்சயிக்கப் பட்டவரையே திருமணம் செய்துக் கொண்டு கொல்கத்தா சென்று விடுகிறார்.

கிட்டத்தட்ட ஐந்தரை வருடங்கள் உருண்டோடுகிறது.தன் தந்தையின் சிகிச்சைக்காக பர்ஃபிக்கு அவசரமாக பணம் தேவைப்பட, ஊரின் பெருந்தனக்காரரின் பேத்தியான ஜில்மில்லை கடத்தி பணம் பறிக்க முடிவுசெய்கிறார். மன நலம் குன்றிய ஜில்மில்லை முயன்று கடத்தி பணம் பறித்தும் விடுகிறார் பர்ஃபி. சிறு வயதிலிருந்து ஆஷ்ரமத்தில் வளர்ந்த ஜில்மில்லிற்கு பர்ஃபியை பிடித்துவிடவே, மீண்டும் வீட்டிற்கு செல்ல மறுக்கிறார். இதற்கிடையில் வங்கி ஒன்றை கொள்ளை அடிக்க முயன்ற வழக்கிலும், ஜில்மில்லை கடத்திய வழக்கிலும் பர்ஃபியை போலீஸ் துரத்துகிறது. போலீசிடம் இருந்து தப்பி ஜில்மில்லையும் அழைத்து கொண்டு பல இடங்களுக்கு பயணிக்கிறார் பர்ஃபி. எல்லார் மனதையும் கொள்ளைக் கொள்ளும் தூய்மையான உள்ளம் கொண்ட பர்ஃபி

ஜில்மில்லின் உள்ளத்தையும் கொள்ளை கொள்வதில் ஆச்சர்யமொன்றுமில்லை .இறுதியில் கொல்கத்தாவில் குடியேறும் பர்ஃபி தன் முன்னால் காதலி ஸ்ருதியை சந்திக்கிறார். பர்ஃபியிடம் கொண்ட ஊடலின் காரணமாக ஜில்மில் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கொல்கத்தாவை விட்டு வெளியேறுகிறார். பின் பர்ஃபியும் ஸ்ருதியும் ஜில்மில்லை தேடுகிறார்கள். தேடல் பயணத்தின் போது, தான் இன்னும் பர்ஃபியை காதலித்துக் கொண்டிருப்பதை உணர்கிறார் ஸ்ருதி. இறுதியில் யார் யாரோடு இணைகிறார்கள் என்பதோடு முடிகிறது கதை.

இது எந்த அந்நிய மூலத்தையும் தழுவாத ஒரு சிம்பிளான கதை.'குறைவான வசனங்கள், நிறைவான காட்சிகள்'' என்ற அடிப்படை திரைக்கதை விதியை பின்பற்றி எழுதப்பெற்ற திரைக்கதை. படத்தில் வசங்கள் மிகக் குறைவு. காட்சிகளாலே படத்தை நகர்த்தி தான் ஒரு தேர்ந்த கதைச்சொல்லி என்பதை மீண்டும் நிருபித்திருக்கிறார் அனுராக் பாசு. ஆனால் தேவையில்லாமல் 'நான்-லினியர்'(NonNon-Linear) உத்தியை பயன்படுத்தி பார்வையாளர்களை குழப்பியிருக்கின்றனர். ஸ்ருதி  பர்ஃபியை விட்டு பிரிந்ததும் கிட்டதட்ட ஆறுவருடம் கழித்து மீண்டும் சந்திப்பதாக அமைந்துள்ளது திரைக்கதை. ஆறு வருடம் எப்படிக் கடந்த்தோடியது என்பதை விவரிக்கவில்லை. கதைக்கு எந்த ஒரு அடிப்படை தேவையுமின்றி 'ஆறு வருட இடைவெளி'' என்பதற்கு ஏன் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்பதும் விளங்கவில்லை. மேலும் திரையில் எந்தக் கதாப்பாத்திரங்களுக்கும் வயதாகவில்லை. இறுதிக் காட்சியில், கதாப்பாத்திரங்களுக்கு வயதானதைக் காட்டுவதற்கு செய்யப்பட்டிருக்கும் ஒப்பனை மூன்றாம் தரமாக அமைந்துள்ளது. சமிபத்தில் வெளிவந்த 'கேங்க்ஸ் ஆப் வசைப்பூர்'' படத்திலும் ஒப்பனை மூன்றாம் தரமாகவே அமைந்திருக்கும். பலக்கோடி செலவழித்து எடுக்கப்படும் பாலிவுட் படங்களில் ஒப்பனை மூன்றாம் தரமாக அமைந்துள்ளது ஆச்சர்யமளிக்கிறது.முகம் சுழிக்கவும் வைக்கிறது.

படத்தின் இன்னொரு கதைசொல்லி இசையமைப்பாளர். தன் இசையின் மூலம் புதியதொரு கதை சொல்கிறார் அவர். பல இடங்களில் காட்சிகளை அடுத்த தளத்திற்கு எடுத்து செல்கிறது இசை. அதே சமயத்தில் படத்தின் தீம் ம்யுசிக் 'அமிலி'' படத்திற்காக யான் டீர்சென் (Yann Tiersen) இயற்றிய இசையை நினைவுப் படுத்துகிறது.

பர்ஃபியாக ரன்பீர் கபூர், எந்த ஒரு பெரிய நடிகரின் பாணியையும் பின்பற்றாமல் அசலான நடிப்பால் முத்திரைப் பதிக்கிறார். ஸ்ருதியிடம் தன் காதலை சொல்வதிலும், அவர் திருமணம் நிச்சயமானவர் என்பதையறிந்து சொன்ன காதலை வாபஸ் வாங்குவதிலும் ரன்பீர் வெளிப்படுத்தியிருக்கும் பாவனைகள் தனித்துவம். படம் முழுக்க அவர் வெளிப்படுத்தியிருக்கும் காமிக்கல் (comical) உடல்மொழி  படம் முடிந்தபின்னும் நினைவிலிருந்து நீங்க மறுக்கிறது. ஜில்மிலாக பிரியங்கா சோப்ராவும் , ஸ்ருதியாக இலியானாவும் தங்கள் கதாப்பாத்திரங்களுக்கு நியாயம் செய்துள்ளனர்.  பிரியங்கா அதிகம் மெனக்கெட்டிருக்கிறார். அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார். முன்னால் உலக அழகியை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் துளிக் கூட எழாத

அளவிற்கு பிரியங்காவின் நடிப்பு ஒரு மனவளர்ச்சி குன்றிய பெண்ணை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது. அதற்க்கு அவரின் உடையமைப்பும் பெரிதும் உதவியுள்ளது.

என்னதான் கதாபாத்திரங்கள் ஒழுங்காக நடித்தாலும் அவர்களின் பாவனைகளை ஒழுங்காக படம்பிடிப்பது மிகமுக்கியமான பணி. அவ்வகையில் பர்ஃபி படத்திற்கு தன் ஒளிப்பதிவின்மூலம் உயிரூட்டியிருப்பவர், ஒரு தமிழர், ஒளிப்பதிவாளர் ரவிவர்மன். படமுழுக்க நிரம்பிக் கிடக்கின்றன வண்ணங்கள். அந்த வண்ணங்களை வண்ணமயமாக படம் பிடித்திருக்கிறது அவரது கேமரா. அதை திரைப்பட தொகுத்த படத்தொகுப்பாளரையும் பாராட்டிட வேண்டும்.

இந்த படத்தில் செய்யப் பட்டிருக்கும் தனித்துவமான 'கலர்கிரேடிங்' இதுவரை எந்த இந்தியப் படத்திலும் செய்யப்பட்டதில்லை. அதுவே காட்சிகளுக்கு மேலும் மெருகேற்றியிருக்கிறது.ஒட்டுமொத்த படக் குழுவும் கடினமாக உழைத்திருப்பது திரையில் தெரியும்.

படத்தில் நிறைகள் நிறைய இருந்தாலும். திருஷ்டி வைத்தாற்போல் படத்தின் குறையாக நம் மனதை நெருடுவது அசல்தன்மையற்ற சிலக் காட்சிகள்.கருப்பு வெள்ளையில் கண்ட சார்லி சாப்லின் படங்களை கலரில் காண்கிறோமா என்று எண்ணும் அளவிற்கு பல சாப்ளின் படக்காட்சிகள் இப்படத்தில் உபயோகியப் பட்டிருக்கின்றன.. மேலும் நோட் புக் (Note Book) , கிக்குஜிரோ (Kikujiro) ,சிங்கிங் இன் தி ரெயின் (Singing in the Rain ) போன்ற பல உலக படங்களில் இருந்து காட்சிகள் தழுவப்பட்டிருக்கின்றன.

இதையெல்லாம் மீறி பர்ஃபி தனித்து நிற்கிறான்.காரணம், மாற்றுத் திறனாளிகளைப் பற்றி எடுக்கப் பட்ட அனைத்து படங்களும் அவர்கள் மீது பரிதாபம் விளைவிப்பதையே அடிப்படை நோக்காக கொண்டு எடுக்கப் பட்டிருக்கும்.ஆனால் பர்ஃபி பரிதாபத்தை ஏற்ப்படுத்தவில்லை. பிரம்மிப்பை ஏற்படுத்துகின்றான்.

இந்திய சினிமாவை பொறுத்தவரையில் 'ஃபீல் குட்'' படங்கள் மிக மிக குறைவு. அதுவும் மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கையில் பொதிந்திருக்கும்

சிறுசிறு சந்தோசங்களை மையப்படுத்தி இதுவரை யாரும் படம் எடுக்க முயற்சித்ததில்லை. அவ்வகையில் பர்ஃபி ஒரு புது முயற்சி. அதற்காகவே பர்ஃபி பாராட்டுதலுக்குரிய திரைப்படமாகிறது. வாழ்வில் ஒளிந்திருக்கும் குறைகளை மறந்து, வாழ்வை அழகாக வாழ்வதைப் பற்றி பேசும் 'பர்ஃபி''சுவையானவன்...

போதி தர்மர் முதல் ஜேம்ஸ்பாண்ட் வரை

# மாற்றான்

சில படங்கள் முதல் காட்சியிலிருந்தே மெதுவாக நகர்ந்து, இது நல்லப் படம்தானா என்பன போன்ற சந்தேங்களை ஏற்படுத்தி, இறுதியில் சிகரம் வைத்தாற்போல் அருமையாக நிறைவுபெற்று, படமென்றால் இதுதான் படமென்று நம்மை சொல்லச் செய்து, நம்மை எழுந்து நின்று கைத்தட்ட வைக்கும்.

சில படங்கள் தொடக்கம் முதலே நல்லப் படம் போல காட்சியளித்து, தனக்கே உரித்தான ஜிகுணா வேலைகளையெல்லாம் செய்துக் கொண்டு, இறுதியில் ‘இதெல்லாம் ஒரு படமா’ என்று எண்ண வைக்கும். ‘மாற்றான்’ இதில் இரண்டாவது வகை.

ஓட்டிப் பிறந்த இரட்டையர்களைப் பற்றி படம் எடுக்க முயற்ச்சித்தமைக்கும், (ஆனால் அந்த முயற்சி மன்னைகவ்வியுள்ளது.) அதற்காக இந்த ஹீரோ மெனக்கெட்டமைக்கும் பாராட்டுக்கள்...

ஆனால் ஓட்டிப் பிறந்த இரட்டையர்கள் என்ற கதை கருவிற்கும், இந்தக் கதை களத்திற்கும் சம்பந்தமேயில்லை. படத்தின் கதை என்னவோ typical தமிழ் டபுள் ஆக்சன் மசாலா படத்தின் கதைதான். ஆனால் டபுள் ஆக்சன் படமாக எடுத்தால் ‘கெத்’ இருக்காது என்பதற்காக, வித்தியாசமான முயற்சி செய்கிறேன் பேர்வழி என்று ஒரு கேலி சித்திரத்தை படைத்துள்ளனர்.

தமிழ் சினிமாவில் டபுள் ஆக்சன் கதைகள் பின்வரும் மாதிரிதான் இருக்கும். ஒரு ஹீரோ சாது, இன்னொருவர்  முரடன். வில்லனை எதிர்த்து முதலில் ஒருவர் போராடுவார், பின் தவிர்க்கமுடியாத ஒரு தருணத்தில் அந்த கடமை இரண்டாமானவரை வந்து சேரும்.

அந்த இரண்டு ஹீரோக்களையும் ஒன்றாக ஒரே உடம்பில் இணைத்து, ‘conjoined twins’ என்ற போர்வையில்  எடுக்கப்பட்ட படமே மாற்றான்.

அந்தக் காலத்தில் டபுள் ஆக்சன் படங்கள் எடுப்பதற்கென்றே ஒரு டெக்னிக் இருந்தது. கேமராவை நடுவில் வைத்து, வலது புறத்தில் ஹீரோவை நடிக்க வைத்து படம்பிடித்து , பின் அதே ஹீரோவை இடது புறத்தில் நடிக்க வைத்து படம்பிடித்து இறுதியில் இரண்டையும் இணைப்பார்கள். அதனால்தான் டபுள் ஆக்சன் கதாப்பாத்திரங்கள் தோன்றும் காட்சிகளில், இருவருக்கும் நடுவில் ஒரு தூணோ, இல்லை ஏதோ ஒரு symmetric பொருளோ இருக்கும். அந்த symmetric பொருளை axis-ஆக வைத்துக் கொண்டு, ஒரே ஹீரோ இரண்டு புறத்திலும் நடித்திருப்பார். என்ன ஆனாலும் கதாப்பாத்திரங்கள் அந்த axis-ஐ தாண்டக் கூடாது..

பின் இந்தக் கோட்பாடுகளையெல்லாம் தகர்த்து, பல டெக்னாலஜிகளை பயன்படுத்தி, மிகவும் திறமையாக எடுக்கப்பெற்ற டபுள் அக்சன் படமே ‘ஜீன்ஸ்’. இரட்டையர்களை படம் முழுக்க எந்த ஒரு பிசிரும் இல்லாமல் உலவ விட்டிருப்பார்

ஷங்கர். அதன் பின் நிறைய டபுள் அக்சன், ட்ரிபிள் அக்சன் தொடங்கி பத்து அக்சன் வரை படங்கள் எடுத்தாகி விட்டது. இதை இன்னும் ஒரு படி மேலே போய் 'conjoined twins' படம் எடுக்கலாம் என்று சிந்தித்துள்ளனர். ஆனால் அதை ஒழுங்காக எடுக்கவில்லை...

பல பொய்களை திரும்ப சொல்லி உண்மையாக முயற்சிக்கும், தமிழ் சினிமாவில் 'முதல் முயற்சி முதல் முயற்சி' என்று அரைக் கூவல் விடுத்து படங்களை promote செய்வது ஒரு தந்திரம்.மும்பை எக்ஸ்பிரஸ் 'முதல் high definition படம்' என்று பிரகடனம் செய்தார்கள். ஆனால் அதற்க்கு முன்பே 'வானம் வசப்படும்' என்ற படம் high definition-யில் எடுக்கப்பட்டுவிட்டது.

அதுபோல் தான் இதுவும். இந்தியாவின் முதல் 'conjoined twins' படம் என்றார்கள். ஆனால் இரண்டு மாதத்திற்கு முன்பு 'இருவன்' என்ற ஒரு படம் வெளிவந்தது. அதுவும் ஓட்டிப் பிறந்த இரட்டையர்களைப் பற்றியக் கதை. பின், 'performance capture' டெக்னிக் பயன்படுத்தி எடுக்கப்படும் முதல் இந்தியப் படம் 'மாற்றான்' என்றார்கள். ஆனால் இதில் பரிதாபத்திற்குரிய விடயம் என்னவெனில், அந்த 'Performance capture' போன்ற எந்த டெக்னிக்கும் படத்திற்கு கைகொடுக்கவில்லை என்பதுதான். இரட்டையர்கள் வரும் காட்சிகளில் படத்தின் கிராபிக்ஸ் மிகவும் கேவலமாக உள்ளது. ஏதோ ஒரு ஹீரோ இன்னொரு பொம்மை ஹீரோவை தூக்கிக் கொண்டு நடப்பது போல் பல இடங்களில் தோன்றும் .இது ஒரு லோ பட்ஜெட் படமென்றால் அலட்டிக்கொள்ளவேண்டியதில்லை. ஆனால் பல கோடிகளை இறைத்து குப்பைகளை எடுக்கும் போது தான் யோசிக்க வேண்டியிருக்கிறது, இன்னும் எத்தனை நாள் தான் ஆடியன்ஸை மாக்கான் ஆக்குவார்கள் என்று…

ஒரு ஆறுதல், இவர்கள் எங்கேயும் science fiction படம், medical fiction படம் என்று பிரகடனப் படுத்தவில்லை. அப்படி செய்திருந்தால் கேலிக் கூத்தாகி இருக்கும்.

'Conjoined twins' எப்பவும் பலவீனமாகத்தான் இருப்பார்கள், அவர்கள் எப்படி பறந்து பறந்து சண்டைப் போடுகிறார்கள் என்பன போன்ற ஆராய்சிகள் செய்ய வேண்டிய அவசியமில்லை. அந்த அளவிற்கு இந்த படம் ஒன்றும் சிறந்த படமில்லை. ஆனால் இந்தப் படத்தின் பின்னணியை மட்டும் பார்ப்போம்...

தமிழ் படைப்புலகில் மட்டுமே இலக்கியத்திற்கும் சினிமாவிற்கும் இருக்கும் இடைவெளி குறைய மறுக்கிறது. இலக்கியவாதிகள் சினிமாவிற்கு வந்தால் இலக்கியத்தை மறந்துவிடுகிறார்கள். இதற்கிடையில் பாக்கெட் நாவலாசிரியர்கள் பாக்கெட் நாவல்களைப்போல் மூன்றாம் தரத்தில் சினிமாவிற்கு கதை எழுதுகிறார்கள்.

'சுபா' என்ற இந்த இரட்டை எழுத்தாளர்கள் திறமைசாலிகளே. இந்தப் படத்திலும் அவர்களின் வசனம் தான் முதல் பகுதிக்கு சுவாரஸ்யத்தைக் கூட்டுகிறது. ஆனால் எந்தப்

படைப்பாளியாக இருந்தாலும் தன் அறிவை update செய்துக் கொள்ள வேண்டும். “Learn, Unlearn, Update “ என்பது மிக முக்கியம்.

பாக்கெட் நாவல்கள் எழுதுபவர்களிலேயே தன் அறிவை அப்டேட் செய்து வைத்திருப்பவர் இந்திரா சௌந்தரராஜன் மட்டுமே. (அவர் வெறும் பாக்கெட் நாவலாசிரியர் அன்று. திறமையான எழுத்தாளர். அதற்கு அவரின் படைப்புகள் சான்று. எனினும் பாக்கெட் நாவல் உலகத்திலேயே நின்றுவிட்டார்) அந்நியனில் சொல்லப்பட schizophrenia-வை அவர் தொன்னூறுகளிலேயே ‘விடாது கருப்பு’ என்னும் கதையில் சொல்லிவிட்டார். அதில் கருப்பு சாமி தண்டனை கொடுக்கும், அந்நியனில் அந்நியன் தண்டனைக் கொடுப்பான் .அவ்வளவுதான் தான் வித்தியாசம்.

ஆனால் மற்ற பாக்கெட் நாவலாசிரியர்கள அனைவரும் புருடா விட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர். ‘மூடாத கல்லறை’, ‘சேராத நிலவு’ ‘மூன்றாவது குறுக்கு தெரு’ என்பன போன்ற பேர்களில் ஏதேதோ எழுதிக் குவிக்கிறார்கள். எனக்கு பிடித்த ராஜேஷ் குமார், எழுதிய ஒரு கதையில் , ஒரு கதாநாயகன் பாலைவனத்தில் தரை இறங்கிய ஒரு விமானத்தினுள் தனியாக சென்று டைம் பாம்பை deactivate செய்வார். அதுபோன்ற மூன்றாம் தரமான புருடாக்கள் ‘மாற்றான்’ படத்தில் விடப்பட்டுள்ளது. Genetic Research, Ionization agent இது,அது என்று கதைக்கு சம்பதமில்லாமல் ஏதேதோ வார்த்தைகளை நுழைத்து (எல்லாம் எட்டாம் கிளாஸ் பாட புத்தகத்திலிருந்து எடுத்த வார்த்தைகள்) படம் காட்டியுள்ளனர். பாக்கெட் நாவல்களில் வரும் மொக்கை ட்விஸ்ட்களை படத்தில் வைத்து மொக்கை வாங்கியுள்ளனர்.

சுவாரசியமாக பாக்கெட் நாவல் எழுதிடலாம். ஆனால் சினிமாவில் எழுதும்போது சினிமாவிற்க்கான தரத்தை மெயின்டையின் செய்ய வேண்டும்.திருப்பாச்சியும் சுவாரஸ்யமான ஆக்சன் படமே. கில்லியும் சுவாரஸ்யமான ஆக்சன் படமே. ஆனால் இவ்விரண்டிற்கும் உள்ள வித்தியாசம் உங்களுக்கு புரிந்திருக்கும். அந்த வித்தியாசம்தான் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று.

பதினைந்து ரூபாய் பாக்கெட் நாவல் எழுதும் ஒரு எழுத்தாளருக்கு சில ஆயிரம் ரூபாயே ராயல்ட்டியாக கிடைக்கும். அவர் குறைந்த தர படைப்புகளை படைப்பதை தாங்கிக் கொள்ளலாம். ஆனால் பல கோடி ருபாய் சம்பளம் வாங்கும் சினிமா இயக்குனர்கள் பாக்கெட் நாவலாசிரியர்கள் போல் மூன்றாம் தர படைப்பை படைப்பதுதான் ஆதங்கம் அளிக்கிறது...

இந்தப் பின்னணியில் தான் இந்தக் கதையை கவினிக்க வேண்டியிருக்கிறது. ஒட்டி பிறந்த கதாநாயகர்களின் தந்தை ஒரு விஞ்ஞானி. அவர் ‘எனெர்ஜியான்’ என்றொரு எனெர்ஜி டிரிங் பவுடரை கண்டுபிடிக்கிறார். அதை உண்ணும் குழந்தைகள் பெரும் திறமைசாலிகளாக வருவார்கள் என்று அவர் பிரகடனப் படுத்தி விற்று பெரும் தொழிலதிபராகிறார். அந்நிலையில் அப்பவுடர் பெரும் பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று தெரிந்துக் கொள்கின்றனர் கதாநாயகர்கள். பின் நடப்பதே படத்தின் கதை. முதல்வனின் வருவது போல் ஒரு சேற்று சண்டை, ஜீன்ஸில் இரட்டையர்கள்

ஐஸ்வர்யாராயிடம் செய்யும் காமெடிகளை போல் சில காமெடிகள், அந்நியனில் வரும் கிருமி போஜனம் போல் ஒரு காட்சியில் எலி போஜனம், இந்தியனில் சொந்த மகனையே எதிர்க்கும் தந்தைப்போல் இதில் உல்டாக் காட்சி என பல ஷங்கர் படங்களை மிக்ஸ் செய்து 'மாற்றான்' என்ற பெயரில் கொணர்ந்துள்ளனர். இந்த மொக்கை மசாலா படத்திற்கு துணையாக பல மொக்கை scientific term-களை உபயோகப் படுத்தி மொக்கை வாங்கியுள்ளனர்.

கதாநாயகர்களின் தந்தை உக்ரைனில் Genetically modified மாடுகளை உருவாக்கி, ஆராய்ச்சி செய்து, அம்மாடுகளிடமிருந்து கறக்கப் படும் பாலைக் குடித்தால் 'extraordinary power' வருவதாக கண்டுக்கொள்கிறார். நிற்க.

அவரே தமிழகத்தில் தன் பண்ணையில் வளர்க்கப்படும் மாடுகளுக்கு உக்ரைனிலிருந்து வரவழைக்கப்பட்ட தீவனத்தைக் கொடுத்து, அம்மாடுகளிடமிருந்து கறக்கப் படும் பாலைக் கொண்டு 'எனெர்ஜியான்' பவுடரை உருவாகுகிறார்.

ஒரு காட்சியில் 'Genetic Engineering' பற்றி பேசுகிறார்கள், இன்னொரு காட்சியில் சம்மந்தமில்லாமல் ஏதோ மாட்டுத்தீவனம் பற்றி பேசுகிறார்கள். அடுத்தக் காட்சியில்

'Advanced Genetic Engineering' பேசுவதாக நினைத்துக் கொண்டு பத்து பேரின் மரபணுவை கொண்டு ஒரு உயிரை உருவாக்குவதைப் பற்றி விவரிக்கிறார்கள். படம் முழுக்க இப்படி பல அறிவியல் பெயர்களை அரை குறையாக உதிர்த்து தங்களைத் தாங்களே கேலி செய்துக் கொண்டதோடில்லாமல், இறுதியில் திரு.நரேந்திர மோடியை கிண்டல் செய்வதாக நினைத்துக் கொண்டு சுரேந்திர லோடி என்ற ஏதோ ஒரு பெயரில் குஜராத் முதல் அமைச்சர் என்ற கதாப்பாத்திரத்தை தேவையில்லாமல் காட்டுகிறார்கள். இதுபோன்று தேவை இல்லாக் காட்சிகள் படத்தில் நிறைய உண்டு.

மேலும் இதில் ஒரு காட்சியில் குஜராத் கிராமவாசிகள் ஹிந்தி பேசுகிறார்கள்.குஜராத் கிராமங்களில் வெறும் குஜராத்தி தான் பேசுவார்கள். ஹிந்தி அன்று. ஹிந்தியோ, குஜராத்தியோ Subtitles போட போவதில்லை என்று முன்கூட்டியே முடிவு செய்துவிட்டதால்தான் என்னவோ இதில் குஜராத்தியர்கள் ஹிந்தி பேசுவது போல் எடுத்துவிட்டார்கள் போலும்.இதையெல்லாம் தாங்கிக் கொள்ளலாம். குஜராத்தியர்களை சித்தரித்திருக்கும் விதம்தான் மிகவும் செயற்கையாக உள்ளது..

சிறு வயதில் கிராப்ட் நோட்டில் எல்லாரும் ஐம்பது பைசா கொடுத்து போஸ்டர் வாங்கி ஒட்டி இருப்போம். பழங்கள், விலங்குகள் என்று வகை வகையான போஸ்டர்கள். அதில் இந்திய மாநில மக்கள் என்று, இந்தியாவின் அனைத்து மாநில மக்களும் அவர்களின் traditional உடையில் இருப்பது போன்ற ஒரு போஸ்டரையும் ஒட்டியிருப்போம். அதில் ராஜஸ்தானியர்கள் என்றால் தலையில் தலைபாகை அணிந்திருப்பார்கள். அதை அப்படியே காப்பி அடித்து இதில் பயன் படுத்தி விட்டார்களா என்று எண்ணும் அளவிற்கு அந்த ராஜஸ்தானிய உடை அலங்காரத்தை இதில்

குஜராத்தியர்களுக்கு செய்திருப்பார்கள். குஜராத்தில் எந்த கிராமத்திலும் அவ்வாறு உடை அணிந்திருக்க மாட்டார்கள்.

மொத்தத்தில் மசாலா படத்தை மசாலாவாக எடுப்பதை விடுத்து, பல புருடாக்களை விட்டு ஒரு கேலி சித்திரத்தை உருவாக்கிவிட்டார்கள்.

திறமைசாலிகள் பலர் வாய்ப்பிற்காக போரடிக் கொண்டிருக்க, பல கோடிகள் செலவு செய்து பில்லா 2 , மாற்றான் போன்று மொக்கை படங்களை மீண்டும் மீண்டும் எடுப்பதுதான் வருத்தமளிக்கிறது. இதற்கிடையில் அடுத்து வரப்போகும் அந்த படத்தின் ட்ரைலரே வயிற்றில் புலியை கரைக்கிறது....

சூரியா திறமையான நடிகர் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அவர் இந்த மாதிரி படங்கள் நடிப்பதுதான் முகம் சுழிக்க வைக்கிறது. திறமையான ஹீரோக்கள் இயக்குனர்களால் வீணடிக்கப் படுகின்றனரா, இல்லை அவர்களே தங்களை வீணடித்துக் கொண்டு இயக்குனரையும் வீணடித்து விடுகின்றனரா என்பது தமிழ் சினிமாவை பொறுத்த வரையில், 'சிதம்பர ரகசியம்'. இந்த ஹீரோ நடித்த முந்தைய படம், ஏழாம் அறிவு ஒரு அரைவேக்காட்டுப் படம் என்பது நினைவிருக்கலாம். மாற்றான் ஒரு படி மேல் சென்று முக்கால் வேக்காட்டுப் படமாக வந்துள்ளது. இவரின் அடுத்தப் படமாவது முழுவேக்காடக வரும் என்று நம்புவோம்..

அரவிந்த் சச்சிதானந்தம்

# முகமூடி

உலகில் எத்தனையோ சூப்பர் ஹீரோ படங்கள் எடுக்கப் பட்டுவிட்டன. எல்லா சூப்பர் ஹீரோக்களும் ஏதோ ஒரு வகையில் extraordinary power கொண்டிருப்பார்கள். அவர்கள் extraordinary league-ஐ சார்ந்தவர்களாகவோ, வேற்று கிரகத்தை சார்ந்தவர்களாகவோ, நிழல் உலகத்தை சார்ந்தவர்களாகவோ, மியூட்டண்ட்களாகவோ (mutants) இருப்பார்கள்.Iron Man மட்டும் சற்று வித்யாசமானவர்.

ஆனால் மிக சாதாரண மனிதன் ஒருவன் எந்த ஒரு அமானுஷ்ய சக்தியின் உதவியின்றி , தன் சொந்த உந்துதலின் அடிப்படையில் மிகவும் விளையாட்டாக சூப்பர் ஹீரோவாக உருவெடுப்பதுபோன்ற கதையை இதுவரை யாரும் சரிவர எடுத்துவிடவில்லை. அதுவும் தமிழில் யாரும் முயற்சித்ததுக்கூட இல்லை. ‘கந்தசாமி’ படம் ஒருவகையில் அதுபோன்ற கதையே எனினும் அது சூப்பர் ஹீரோ படமாக பிரகடனப்படுத்தப் படவில்லை. ‘முகமூடி’ திரைப்படம் தொடக்கம் முதலே சூப்பர் ஹீரோ படமாக பிரகடனப்படுத்தப்பட்டவொன்று என்பதை நினைவில் கொள்வோம்…

பூதக் கண்ணாடி வைத்துக் கொண்டு ‘முகமூடி’ படத்தை ஆராய்ந்தால் ஆயிரம் குறை கண்டுபிடித்து விட முடியும். ஆனால் அது புது முயற்சியை எடுத்திருக்கக் கூடிய ஒரு படைப்பாளியை அவமதிக்கும் செயல். எது எவ்வாறெனினும் இந்த படத்தை பாராட்டிட சில முக்கிய காரணங்கள் உண்டு

உலகிலேயே முதல் ‘non-white skinned’ சூப்பர் ஹீரோ முகமூடி தான். முகமூடி மிக சாதாரணமானவன். ஒரு சராசரி மனிதன். எந்த ஒரு அமானுஷ்ய சக்தியும் பெறாதவன். சண்டை காட்சிகளில் போராடி சண்டை போடுவது தொடங்கி, மாடிவிட்டு மாடி தாண்டும் போது மிகவும் கடினப் பட்டு தாண்டுவது வரை அனைத்து காட்சிகளும் அவன் ஒரு சாதாரணமானவன் என்பதை நினைவு படுத்துகிறது.

இது மிகவும் சாதாரணமான ஒரு கதை. ட்விஸ்ட் இல்லாத ஒரு திரைக்கதை. இதில் இரண்டாம் பாதி சற்று ஸ்லோவாக நகர்ந்தாலும், இது மிகவும் நாகரிகமான திரைக்கதை. காரணம் இந்த கதையை வேறு எவ்வாறும் நகர்த்த முடியாது. ஒரு லோக்கல் நாயகன் ‘சூப்பர் ஹீரோ’ ஆகிறார். அவர் மக்களுக்கு நல்லது செய்கிறார். இது ஒரு typical தமிழ் படத்தின் திரைக்கதையே. (அந்த காலத்தில் வந்த S.A Chandrasekar அவர்களின் படக் கதைகளை விட சாதாரணமான கதையே ‘முகமூடி’ ) ஆனால் ‘larger than life hero’ ‘robin hood’ போன்ற கதாபாத்திரங்களை அமைத்து இந்த படத்தை இயக்கி இருந்தால், இது ஒரு மிகமிக சராசரி படம் என்று கூறி ஒதுக்கி விடலாம். ஆனால் மிகவும் தைரியமாக ஒரு ‘super hero’ கதப்பாத்திரத்தை தமிழ் திரையுலகில் முதன்முதலாக உலவவிட்டதற்க்கு முகமூடி குழுவினை நாம் பாராட்டிட வேண்டும். இது வரை தமிழில் உள்ள எந்த ஜாம்பவானும் சூப்பர் ஹீரோ கதையை எடுத்திடவில்லை. சரித்திரக் கதைகளும், சூப்பர்

ஹீரோ கதைகளும், Pirates கதைகளும் சமகால தமிழ் சினிமாவில் எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது. பொன்னியின் செல்வனை படமாக எடுக்க கடந்த ஐம்பது வருடமாக முயன்று தோற்றுக்கொண்டிருக்கிறார்கள். மேலும் சாண்டில்யன் அவர்கள் கதைகளையே திரைக்கதை போன்றுதான் எழுதியிருப்பார். அதையும் நாம் படமாக எடுக்க முயற்சித்ததில்லை. நிற்க.

இந்த சூழ்நிலையில்தான் ஒரு படைப்பாளி ஒரு புது முயற்சியை செய்கிறான். அந்த முயற்சியை பாராட்டுவதும் விமர்சிப்பதும் பார்வையாளர்களின் தனிப்பட்ட உரிமை. ஆனால் ஒரு படைப்பை புறங்கையால் ஒதுக்கித் தள்ளுவதற்க்குமுன் அதற்க்கான நியாயமான காரணங்களை முன்வைக்க வேண்டும். அவ்வாறு வைக்க இயலாத பட்சத்தில் நாம் ஓரவஞ்சனை செய்கிறோம்…

இந்தியாவில் உள்ள வெகு சில finest ஸ்கிரிப்ட் ரைட்டர்களில் மிஷ்கினும் ஒருவர். அஞ்சாதே, நந்தலாலா போன்ற படங்கள் அதற்க்கு சான்று. (நந்தலாலா சுட்ட படமே எனினும் அதன் மூலத்தை விட ஸ்கிரிப்ட் அருமையாகவே எழுதப் பட்டிருக்கும் ). அந்த படங்களையே நாம் சரி வர ஆதரிக்கவில்லை. அவ்வாறான சூழ்நிலையில் இந்த படத்தின் ஸ்கிரிப்டை, ஒரு படைப்பாளியின் புது முயற்சியை ஓரவஞ்சனையோடு ஆராய்ச்சி செய்திடக் கூடாது.

இந்த படத்தை எடுத்தற்காக, இந்த படக்குழுவை நிறைய பேர் தூற்றுகிறார்கள். ஒருவன் திருவிழாக்கூட்டத்தில் புது சட்டையை அணிந்துக் கொண்டு வந்து அனைவரிடமும் காட்டுகிறான். அது பிடித்திருக்கிறது பிடிக்கவில்லை என்று சொல்கிற உரிமை மட்டுமே அனைவருக்கும் உண்டு. அதனை கிழித்தெரியும் உரிமை யாருக்குமில்லை.அதுபோன்று இந்த படத்தினை தகுதியற்று எடுத்துவிட்டார்கள் என்று குற்றம்சாட்டும் உரிமை யாருக்குமில்லை.

'முகமூடி' 'சூப்பர் ஹீரோ' மாதிரியே இல்லை என்று நாம் எவ்வாறு கூற முடியும்! 'சூப்பர் ஹீரோவிற்க்கென்ற குணாதிசியங்களை வரையறுத்தது யார்? நம் புராணங்களில் வரும் 'அனுமான்' கதாப்பாத்திராமே ஒரு வகையான சூப்பர் ஹீரோ தானே. சிறு வயதில் நாம் அனைவரும் 'பண்டிட் கங்காதர் வித்யாதர் மாயதர் ஓம் கர்ணா சாஸ்த்ரி' என்கிற 'சக்திமான்' என்ற ஒரு கதாபாத்திரத்தை கண்டு கைத்தடி இருக்கிறோம். அந்த கதைகள் எல்லாம் சராசரியாக தானே இருக்கும்.அவர்கள் 'அசாதாரணமான மனிதர்கள். 'முகமூடி' சாதாரணமானவன். அவ்வளவுதான்.

'சூப்பர் ஹீரோ' என்றால் இப்படிதான் இருப்பார் என்ற ஒரு நிழல் அந்நியப்படங்களின் மூலம் நம் மனதில் ஆழமாக பதிந்துவிட்டது. அதனால் நியாயமாக இருந்தாலும் லோக்கலாக இருக்கிறார் என்ற ஒரே காரணத்திற்காக 'முகமூடி' கதாபாத்திரத்தை ஏற்றுக் கொள்ள பெரும்பாலானோர் மறுகின்றனர். 'சூப்பர் ஹீரோ' கனவு ஒவ்வாருத்தருக்குள்ளும் இருக்கும். ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இருக்கும் ஃபேண்ட்டசியின் விளைவே சூப்பர் ஹீரோக்கள். ஒவ்வொருவரும் சிறு வயதில்

அலாவுதின் அற்புத விளக்கைப் பற்றி கனவு கண்டிருப்பார்கள். தான் ஸ்பைடர் மேனாக உருவெடுத்தால் எப்படி இருக்கும் என்றும் எண்ணிப் பார்த்திருப்பார்கள். அவ்வாறான கதாப்பாத்திரங்கள் தமிழ் பேசினால் எப்படி இருக்கும் என்று கனவு கண்டு ஒரு படைப்பாளி இங்குபடமாக எடுத்திருக்கிறார். இதில் அவர் எந்த ஒரு அமானுஷ்ய சக்தியின் உதவியையும் நாடவில்லை, அதற்கான அவசியமும் ஏற்படவில்லை. ஏனெனில் முகமூடி மிகவும் சாதாரணமானவன், உங்களையும் என்னையும் போன்று..

ஒரு லோக்கல் சூப்பர் ஹீரோ லோக்கலாக தான் உருவாகமுடியும். அதனால்தான் சூப்பர் ஹீரோவிற்க்கு ஆடை தைக்கும் காட்சிகள் முதல், அவர் செய்யும் சாகசங்கள் வரை அனைத்தும் சாதாரணமாக அமைந்துள்ளது. தமிழ் சூழலில், மக்களுக்கு ஒரு கதாப்பாத்திரம் நல்லது செய்கிறான் எனில், குழந்தைகளை காப்பாற்றுகிறான், கொள்ளையில் இருந்து வங்கியை காப்பாற்றுகிறான் என்றுதான் திரைக்கதை அமைக்க முடியும்.மிகவும் advanced படமாக எடுக்கவேண்டும் என்றால் ‘Bio-war’ ‘nuclear weapon’ போன்ற விஷயங்களிலிருந்து ‘சூப்பர் ஹீரோ’ மக்களை காப்பற்றுகிறான் என்று கதை எழுதலாம். ஆனால் அவ்வாறான படங்களை இங்கு எத்தனை பேர் ஏற்றுக் கொள்வார்கள். திரு.ஜனநாதன் இயக்கிய ‘ஈ’ திரைப்படம் ‘Bio-war’ பற்றி பேசிய முதல் தமிழ் படம். அந்த படத்தினை ஏன் யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை!

அதனால் முகமூடியின் காட்சிகள் ஆங்கில படத்தில் வரும் சராசரி காட்சிகள் என்று விமர்சிப்பவர்கள் ஒரு விடயத்தை நினைவில் கொள்ளவேண்டும். ‘முகமூடி’ என்பது சிறு முயற்சியே. பெரிய சாதனைகள் அனைத்தும் சிறு முயற்சியில் இருந்தே தோன்றுகிறது என்பதால் ‘முகமூடி’ என்ற சாதாரணமான ‘சூப்பர் ஹீரோவை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் அவன் வருங்காலத்தில் இன்னும் பல சாதனைகள் செய்திடுவான். (Mugamoodi is an ordinary guy with extraordinary potential.) இந்த படத்திற்க்கு செய்ய வேண்டிய நியாயத்தை செய்தால் அடுத்தடுத்து பிரமாண்டமான, இன்னும் சிறந்த பாகங்களை எதிர்பார்க்கலாம். அதை யார் வேண்டுமானாலும் எடுக்கலாம். தமிழின் முதல் சூப்பர் ஹீரோவாகிய முகமூடியை ஒதுக்கித் தள்ளினால், வேறு யாரும் சூப்பர் ஹீரோ படம் எடுக்க முயற்ச்சிக்க மாட்டார்கள்…

ஒட்டுமொத்த படக் குழுவும் கடினமாக உழைத்துள்ளதை திரையில் உணரலாம்.இந்த படத்தின் கதாநாயகன் ஜீவா,தன் கதாப்பாத்திரத்திற்கு மிகவும் நியாயம் செய்துள்ளார். பெரும்பாலான காட்சிகள் இரவிலேயே நகர்கிறது. அதனை அருமையாக ஒளிப்பதிவு செய்துள்ள ஒளிப்பதிவாளரை பாராட்டிட வேண்டும். காட்சிகளுக்கு மேலும் மெருகேற்றியுள்ளார் இசையமைப்பாளர், தன் அருமையான பின்னணி இசையின் மூலம். ஆனால் இசை சில இடங்களில் Hans zimmer-ஐ ஞாபகப்படுத்துகிறது. (எப்படி sci-fi கதைகளில் Issac Asimov-வின் தாக்கத்தை தவிர்க்க முடியாதோ, அதே போன்று

சமகாலத்தில் பிரமாண்டமான இசையில் Hans zimmer-யின் தாக்கத்தை தவிர்க்க இயலாது)

உலகில் தலை சிறந்த இயக்குனர்கள் பலர் இருந்தாலும், “creative Directors” என்று சொல்லக் கூடியவர்கள் வெகுசிலரே. Kurosawa, Coppola போன்று. இந்தியாவில் அனுராக் கஷ்யப், தியாகராஜ குமாரராஜா, மிஷ்கின் போன்றவர்கள் குறிப்பிடத்தகுந்த creative Directors. அவர்கள் தனக்கென்று ஒரு ‘classic style’ வைத்துள்ளனர். மிஷ்கின் வெறும் காலை மட்டும் காட்டுகிறார் என்கிறார்கள். ஆனால் அவர் படங்களில் கால் ஆயிரம் கதை சொல்கிறது. நந்தலாலாவில் எங்கும் பயணிக்கும் கால்களை அதிகம் காட்டியிருப்பார், அது பயணம் சம்பத்தப் பட்ட படம் என்பதால்.

அஞ்சாதே, யுத்தம் செய் போன்ற படங்களின் முதல் காட்சிகள் நினைவில் இருக்கலாம். ஒரு இயக்குனர் ஒரு காட்சியை எப்படி வேண்டுமானாலும் எடுத்திட முடியும். ஆனால் அதில் அவர் காட்டும் creativity தான் அவரை தனித்து நிற்கச்செய்கிறது. அதற்க்கு அஞ்சாதே படத்தின் முதல் காட்சி ஒரு தலைசிறந்த உதாரணம். அது போல இந்த படத்திலும் அந்த ‘டைரக்டர் டச்’ இருக்கிறது. குறிப்பாக கதாநாயகன் முகமூடியாக உருவெடுக்கும் (transition) அந்த ஒரு காட்சி, a perfect director touch. மேலும் சில காட்சிகள் Kurosawa way of making-ஐ நினைவுப்படுத்தும். ஒரு சூப்பர் ஹீரோ கதையை Akira kurosawa ஸ்டைலில் பார்க்க விரும்புபவர்கள் முகமூடியை பார்க்கலாம். (திரு. மிஷ்கின் அவர்களின் படங்களில் குரோசாவாவின் தாக்கம் நிறைய உண்டு. நந்தலாலாவில் அவரது நடிப்பு குரோசாவாவின் ஆஸ்தான நடிகரான ஜப்பானின் Toshiro Mifune அவர்களின் நடிப்பை பல இடங்களில் நினைவுப்படுத்தும் )

இந்தபடத்தின் ஸ்கிரிப்டை ஒரு புறம் குறைக் கூறுகிறார்கள். தமிழ் படைப்புலகில் கதைகளுக்கு பஞ்சமில்லை. இங்கு ஆயிரக் கணக்கான கதைகள் கொட்டிக்கிடக்கின்றன. ஆனால் இலக்கியத்திற்க்கும் திரைப்படத்திற்க்கும் உள்ள இடைவெளி இன்னும் குறைந்தபாடில்லை. ‘யவன ராணி’ கதையில் சாண்டில்யன் நிறைய வித்தைகள் காட்டியிருப்பார். ஒரே நாவலில், கடல் கொள்ளையர்கள், கடற் போர். நிலப் போர், தத்துவங்கள் என நிறைய விவரித்திருப்பார். ஆனால் அதனை இதுவரை யாரும் படமாக எடுத்திடவில்லை. காரணம் அதனை அவ்வளவு எளிதாக ‘execute’ செய்திட இயலாது. அருமையான கதைகளை பக்கம் பக்கமாக எழுதிடலாம். ஆனால் அதனை ‘execute’ செய்வது தான் மிக பெரிய பணி. ‘execution’ வெறும் திறமை சார்ந்ததன்று. சூழலை சார்ந்ததுமாகும். ‘ஸ்பீட்’ போன்று ஒரு ஸ்கிரிப்டை இங்கு எழுதிடமுடியும், ஆனால் எந்த ரோட்டில் பேருந்தை ஓட விடுவது?

ஸ்பைடர் மேன் டிரைனை ‘web’ விட்டு தடுப்பது போன்ற காட்சியை இங்கு எப்படி அமைத்திட முடியும்?

அரவிந்த் சச்சிதானந்தம்

சூப்பர் மேன் மாடி விட்டு மாடி தாண்டுகிறார் என்றால், மவுண்ட் ரோட்டில் தானே எடுக்க முடியும்? அப்போதும்,கேலி செய்பவர்கள் கேலி செய்வார்களே?

பேட் மேன் வைத்துருப்பது போன்ற வாகனங்களின் 'prototype' செய்வது கூட இங்கு கடினமாயிற்றே ?

இவை அனைத்திற்க்கும் 'செட் போட்டால் எவ்வளவு கோடிகள் இறைக்க வேண்டும். கிராபிக்ஸ் காட்சிகளிலும் நிறைய தமிழ் படங்கள் மொக்கை வாங்கியுள்ளதே. அவ்வாறெனில் உலக தரத்திற்க்கான கிராபிக்ஸ் எவ்வாறு சாத்தியம்?

எல்லா ஸ்க்ரிப்ட்களையும் execute செய்திட முடியாது.. இந்த சூழ்நிலையில் execute பன்னக்கூடிய அளவிற்க்கு ஒரு சிம்பிலான சூப்பர் ஹீரோ ஸ்கிரிப்டை எழுதி, அதை மிகவும் நாகரிகமான முறையில் படமாக்கிய ஒரு குழுவை, பல புது முயற்சிகளுக்கு விதை விதைத்துள்ள ஒரு குழுவை தவறாக விமர்சிப்பதோ, அவர்களின் படைப்பை புறக்கணிப்பதோ எற்ப்புடைய செயலாகாது.

படத்தோட கிளைமாக்ஸ் பற்றி நிறைய விமர்சனம் உண்டு. சமீபத்தில் வந்த 'மதுபானக்கடை' படமும் திடீர்னு முடிந்திடும். ஆனால் அந்தப் படத்தை குறை சொல்ல முடியாது. ஏனென்றால் அது ஒரு தலை சிறந்த முயற்சி. அது ஒரு off-beat படம். ஆங்கிலத்தில் சிறைச்சாலையினுள் நடக்கும் கதைகள், சூப்பர் மார்க்கெட்டில் நடக்கும் கதைகள் என நிறைய படங்கள் வந்திருக்கு. தமிழ்ல TASMAC-உள்ள நடக்கும் நிகழ்வுகளை அடிப்படையாக் கொண்டு எடுக்கப்பட அந்த படத்தை எத்தனைப் பேர் ஆதரித்தோம் ? விமர்சிப்பவர்கள் எந்த முயற்சி செய்தாலும் விமர்சித்துக் கொண்டுதான் இருப்பார்கள்....

அன்பேசிவம் சுட்டபடமே எனினும் ஒரு தலை சிறந்த தமிழ் படம். ஆனால் அது ஓடவில்லை . ஆரண்ய காண்டம், தென் மேற்கு பருவக் காற்று, வாகை சூடவா போன்ற நிறைய நல்லப் படங்கள் இங்கு ஓடவில்லை. ஆனால் அந்த அளவுக்கு முகமூடி தலை சிறந்த படமென்று சொல்லவில்லை. 'முகமூடி' ஒரு சாதாரணமான படம்.ஆனால் அசாதாரணமான முயற்சி. அந்த முயற்சியைதான் நாம் பாராட்டிட வேண்டும்.

ஆங்கிலப் படங்கள் அளவிற்க்கு technology இந்த படத்தில் உபயோக படுத்தப் படவில்லை என்று விமர்சிக்கிறார்கள். அதற்கான அவசியம் இக்கதைக்கு இல்லை. 'டார்க் நைட் ரைசஸ்' போன்ற படங்களோடு 'முகமூடி' படத்தினை ஒப்பிட்டு பார்ப்பது மிகவும் தவறு. நோலான் படங்கள் மாதிரி இந்தப் படங்கள் இருக்காது. சமகால உலக சினிமாவில் நோலான் சிம்மசொப்பனம், பல சுயாதீனப் படைப்பாளிகளுக்கு மனதளவில் மானசீக குருவாக அவர் விளங்குறார் என்பதில் எந்த ஐய்யப்பாடுமில்லை. கடந்த பதினைந்து வருடத்தில் அவர் அடைந்திருக்கும் வளர்ச்சி பிரமிக்க வைக்கிறது. ஆனால் நோலான் போன்ற படைப்பாளிகள் இயங்கும் சூழல் வேறு. நம் படைப்பாளிகள் இயங்கும் சூழல்

வேறு. நம்முடைய சூழலை சார்ந்துதான் இந்தப் படத்தை விவாதிக்கணும். தமிழ் சூழலில் முகமூடி ஒரு மிகப்பெரிய முயற்சி..

இப்போது இருக்கும் தமிழ் சூழலில் ‘முகமூடி’ மாதிரிதான் ஒரு தமிழ் சூப்பர் ஹீரோ படம் எடுக்க முடியும். முகமூடி ஒரு நாகரிகமான படம். பாராட்டுதலுக்குரிய முயற்சி. அதனால் எந்த ஒரு பெரிய எதிர்பார்புமின்றி, மூளையில் எந்த ஒரு நிழல் உருவத்தின் தாக்கமுமின்றி, தமிழ் சூப்பர் ஹீரோ எப்படி இருப்பான் என்ற ஆசையோடு , பாட்டி மடியில் படுத்து கதை கேட்கும் குழந்தைப் போல ‘முகமூடி’ படத்தை பார்க்கும் ஒவ்வொருவருக்கும் இப்படம் பிடிக்கும். இதில் இருக்கும் உழைப்பு புரியும்..

அதை விடுத்து, நாங்க Dark Knight Rises மாதிரி இருந்தாதான் சூப்பர் ஹீரோ படமென்று ஏற்றுக் கொள்வோம் என்று சொல்ற எல்லாரும் கொஞ்சம் காத்திருந்தால், foreign technology implement பண்ணி இங்கு யாராவது டார்க் நைட் ரைசஸ விட நல்ல படமே எடுப்பாங்க. முன்னாடி சொன்ன மாதிரி அதுக்கு நம்ம கொஞ்சம் காத்திருக்கணும். காத்திருப்போம் ஒரு நாற்பது வருடம்.....

அரவிந்த் சச்சிதானந்தம்

# பில்லா II ஒரு பார்வையும், தமிழ் ரசிகர்களுக்கு சில வேண்டுகோள்களும்

ஒரு படத்தை பற்றிய விமர்சனம் அந்த படத்தை எந்த வகையிலும் பாதிக்கப் போவதில்லை. படம் பார்ப்பவர்கள் பார்த்துக் கொண்டுதான் இருப்பார்கள். பார்க்க விரும்பாதவர்கள் எந்த காலத்திலும் பார்க்கப் போவதில்லை. ஆனால் முத்தாய்ப்பாக வரும் நல்ல படங்களை கொண்டாடவேண்டிய கடமை நமக்கிருக்கிறது. அதை சமயத்தில் பில்ட்-அப்போடு வந்து ஊரை ஏமாற்ற முயற்சிக்கும் படங்களை அலச வேண்டிய பொறுப்பும் நமக்கிருக்கிறது.கால புத்தகத்தில் படங்களின் இருப்பை பற்றிய கருத்துக்களை பதிவு செய்யவேண்டியது ரசிகர்களின் கடமை...

இங்கு ரசிகர்கள் என்று குறிப்பிடப்படுபவர்கள், திரைப்படங்களின் ரசிகர்கள். நடிகர்களின் ரசிகர்கள் அன்று. உலக திரைப்படங்களை எந்தவொரு 'ஓரவஞ்சனை'யும் இல்லாமல் பார்க்கும் ரசிகன்  என்ற முறையில் இங்கு இந்த விமர்சனங்களை பதிவு செய்கிறேன்.

எனக்கு எல்லா படங்களும் ஒன்றுதான். 'வில்லு' எனினும், 'மங்காத்தா' எனினும் 'ராஜபாட்டை' எனினும், வேறு எந்த படம் எனினும் எல்லாம் ஒன்றுதான். பெரும்பாலான படங்கள் முதல் நான் முதல் காட்சி பார்த்துவிடுவேன். உலக திரைப்படங்களை உன்னிப்பாக கவனிப்பது மட்டுமே என் வேலையாக இருப்பதால் 'ஆயிரம் விளக்கு' , 'நாங்க', 'நான் சிவன் ஆகிறேன்' , 'கொண்டான் கொடுத்தான்', 'ஒத்தக் குதிரை', 'வெங்காயம்', ' நில் கவனி செல்லாதே' 'நஞ்சுபுரம்' என பலரால் கவனிக்கப் படாத பல தமிழ் படங்களை திரையரங்கிற்க்கு சென்று பார்த்தவன்-பார்பவன் என்ற முறையில் ஒரு திரைப்படத்தை பற்றி எழுதும் எல்லா உரிமைகளும் எனக்கிருக்கிறது....

"பணக்காரனா இருந்தாலும் பிச்சக்காரனா இருந்தாலும், கூலியா இருந்தாலும் உழைத்தால்தான் மேல வரமுடியும்" என்று 'பில்லா II' படத்தில் ஒரு வசனம் வரும்.அதே போல ஒவ்வொரு படமும் பல பேரின் உழைப்பினால்தான் வெளியே வருகிறது.அதற்காக எல்லாம் படத்தினையும் சிறந்த படமென்று கருத இயலாது. 'ஆரண்ய காண்டம்' போன்ற அருமையான படங்கள் மண்ணை கவ்வுவதும், 'சகுனி'போன்ற மொக்கை படங்கள் கல்லாவை நிரப்பிக் கொள்வதும், தமிழ் சினிமாவின் சாபக் கேடு.

அதே போல், தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடும் அளவிற்க்கு,'பில்லா II' ஒன்றும் தலை சிறந்த படமன்று. உலக சினிமாவின் ரசிகர்கள் யாராலும் அதை உரக்க சொல்லிட முடியும். சில நூறு ரூபாய்கள் இறைத்து, 'இந்த படமாவது நல்லா இருக்காதா' என்ற நப்பாசையில் ஒவ்வொரு தமிழ் படத்தினையும் பார்க்கும் போது, அந்த படமும் நன்றாக இல்லாத பட்சத்தில் அதை வெளிப்படையாக  விமர்சிப்பதை விட வேறு இல்லை.

“அமெரிக்கன் நியூ வேவ்” (american new wave) சினிமாவின் மிக முக்கியமானவர்களில் ஒருவராக கருதப்படும் Brian de palma-வால் 1983யில் இயக்கப்பட்ட ‘scarface’ படத்தின் அப்பட்டமான தழுவலே ‘பில்லா II’.

பில்லா II என்ற பெயரில் பில்லாவின் வாழ்கையின் முற்பகுதியை படமாக எடுக்கவேண்டும் என்ற கட்டாயத்தில் திரைக்கதை எழுதியுள்ளனர்.,‘Scarface’ திரைக்கதையை உருவி பின் அதை தமிழுக்கு ஏற்ற மாதிரி மாற்றுகிறேன் பேர்வழி என்று மூன்று பாடல்களை சொருகி, பின் இதனை பில்லா ஒன்றோடு இணைக்க வேண்டும்மென்பதால் மிகவும் கடினப்பட்டு ‘scarface-யின் கிளைமாக்ஸ் காட்சியை மாற்றி, அதே சமயத்தில் ‘scarface’-யின் முக்கிய காட்சிகளை தவிர்க்க முடியாமல் தவித்து இறுதியில் ஒரு ‘copy cat’ படத்தினை கொணர்ந்துள்ளனர். இது ‘prequel’ என்பதால், பில்லா இறுதி வரை உயிரோடு இருக்கவேண்டும் என்பதால் ‘scarface’-யின் கெத்தான கிளைமாக்ஸ் காட்சியினை இப்படத்தில் வைக்க இயலவில்லை...

வசங்களை மையப் படுத்தி எடுக்கப்பட்ட திரைப்படம் scarface. அத்திரைப்படத்தின் சில முக்கிய வசங்களை இதற்கு முன்னே தமிழ் சினிமாவின் ‘செவ்வனசெம்மல்கள்’ உருவி விட்டதால், இந்த திரைப்படத்தில் வேறு வழி இன்றி அந்த முக்கிய வசனங்கள் வந்த காட்சிகளை தவிர்த்துள்ளனர்.அதனால்தான் படம் இரண்டு மணி நேரம் மட்டும் ஓடுகிறது. இல்லையேல் ஆங்கில மூலத்தை போன்று மூன்று மணி நேரம் ஓடியிருக்கும். scarface-யின் முக்கிய காட்சிகள் அனைத்தும் இந்தப் படத்தில் திணிக்கப் பட்டிருக்கிறது. தழுவல் திரைப்படங்கள் தமிழுக்கு புதிதன்று, ஆனால் ‘scarface’-யின் வெளிப்படையான தழுவலென்று சொல்லிவிட்டு இவர்கள் ஒரு ‘கேங்க்ஸ்டர்’ படம் எடுத்திருந்திருக்கலாம்.அதை விடுத்து பில்லா II எடுத்தே ஆக வேண்டுமென்ற கட்டாயத்தில் ‘scarface’-யின் டோனி மொன்டானா (Tony montana) கதாப்பாத்திரத்தையும் ‘டேவிட் பில்லா’ கதாப்பாத்திரத்தையும் இணைக்க முயற்சித்து, தோற்றுள்ளனர்.

உலக திரைக்கதைகளில் மிக முக்கியமாக கருதப்படும் கதாப்பாத்திரங்கள் மூன்று,

1.Travis bickle (Taxi Driver-1976)

2. Tony montana (Scarface-1983)

3.Joker (Dark Knight-2008)

விசித்திரமான கதாப்பாத்திரங்கள் பல உண்டெனெனினும், மேற்கூறிய மூன்று கதாப்பாத்திரங்களும் மிக மிக விசித்திரமானவர்கள், எப்போது எதைச் செய்வார்கள், எந்த ‘modulation’-இல் பேசுவார்கள் என்று வரையறுத்துக் கூற இயலாது. அவ்வாறான ஒரு

கதாபாத்திரத்தை மிகவும் பரிச்சயமான ‘பில்லா’ கதாப்பாத்திரத்தோடு இணைக்க முயற்ச்சித்ததை தவிர்திருக்கலாம்...

எந்த பாணியில் திரைக்கதை எழுதினாலும் அதில் continuity இருக்க வேண்டும். ஆனால் இந்த படத்தில் அது அணுவளவும் இல்லை. திடீரென பழைய கார்கள் வருகிறது, பழைய துப்பாக்கியை உபயோகப் படுத்துகிறார்கள்.அடுத்தக் காட்சியில் நவநாகரிக உடைகளும், பொருட்களும் காட்டப் படுகின்றன. திடீரென்று 5000 ரூபாய் வியாபாரம் பேசுகிறார்கள். அடுத்தக் காட்சியில் ஒரு கோடி ரூபாய் வியாபாரம் பேசுகிறார்கள். பின் 300 மில்லியன் டாலர்ஸ் என்கிறார்கள், 500 மில்லியன் டாலர்ஸ் என்கிறார்கள். உன்னிப்பாக கவனித்தால் கிட்டதட்ட 25 வருடங்களை சில நிமிடங்களில் காட்சிப்படுத்தியிருப்பது போன்று தோன்றும்.( “அமெரிக்கன் நியூ வேவ்” சினிமாவின் தாக்கம்.) ஆனால் இது அத்தனை வருடங்கள் நடக்க கூடிய கதையன்று.

ஒரு சாதாரணமானவன் எப்படி பெரிய கேங்க்ஸ்டராக மாறுகிறான் என்பன போன்ற ஒரு கதையை அழகாகவும் ஆழாமாகவும் எடுத்திருக்கலாம்.ஆனால் அதை ‘பில்லா II’ என்ற பெயரில் எடுக்கும் போது, கதை நடக்கும் காலத்தை தெரிவித்திருக்க வேண்டும். ஏதாவது ஒரு குறிப்பிட்ட காலத்தை எடுத்து (தொண்ணூறுகளின் இறுதியிலோ, அல்லது இரண்டாயிரத்தின் தொடக்கத்திலோ) அதில் பில்லா கேங்க்ஸ்டராக உருவாகிறார் என்று காட்டியிருக்கலாம்.ஆனால் ஒரு காட்சியில் கதாப்பாத்திரங்கள் , ஏதோ எம்பதுகளில் வருவதை போன்ற ஆடைகளை அணிந்திருக்கிறார்கள். அடுத்தக் காட்சியில் சமகாலதில் அணிந்துள்ள நவநாகரிக உடைகளை உடுத்தியுள்ளனர்.(குறிப்பாக கதாநாயகி முதல் காட்சியில் உடுத்தும் பழைய காலத்து உடையையும் அடுத்தக் காட்சியில் உடுத்தும் கவர்ச்சியான சமகால உடையையும் கவனிக்கவும்) திரைக்கதை ஆசிரியர்கள் மிகவும் குழம்பியுள்ளனர் என்பது திண்ணம்.தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்பும் வேலையை செவ்வன செய்துள்ளனர் திரைக்கதையாசிரியர்கள்.

இங்கு இந்த திரைப்படத்தை விமர்சிக்கும் உரிமை நமக்கு இருக்கும் பட்சத்தில் , அதில் இருக்கும் சிறப்பம்சங்களை பாராட்ட வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. அவ்வாறான ஓர் சிறப்பம்சம் ‘அஜீத்’.

தொடக்கத்தில் இந்த கலைஞன் மீது பெரிதொரு பிரமிப்பு இருந்ததில்லை. பல வருடங்களுக்கு முன் இவர் நடித்த ‘ஜனா’ படத்தை 60 ரூபாய் கொடுத்து தாம்பரத்தில் ஒரு தியேட்டரில் பார்த்ததாக ஞாபகம். (பில்லா-2 குஜராத்தில் 300 ரூபாய் ) பால்கனி டிக்கெட்டே 15 ரூபாய் விற்ற அந்த தியேட்டரில் 60 ரூபாய் மிக மிக அதிகம். தியேட்டரை விட்டு வெளியில் வரும்போது எழும்பிய ஒரு எண்ணம் ‘அய்யோ! என் காசு போச்சே.’

பின் உலக சினிமாவப் பற்றிய பார்வை விஸ்தரிப்படைந்த சமயத்தில் இவரின் பில்லா வெளிவந்தது.பெரிதாக எந்தஒரு அலட்டல் வேலைகளுமின்றி வெகு எதார்த்தமாகஇவர் அந்தப்படத்தில் நடந்ததற்கும்-நடித்ததற்கும் பறந்தன,கைதட்டல்கள். தொடக்கம் முதலே

இவர் ஆசை, வாலி, முகவரி என பல படங்களில் தன் திறமையை நிருபித்திருந்தாலும்பெரும்பாலான திரைப்படங்களில்.இவர் ஒழுங்காக பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை,பில்லா II உட்பட...

'நான் கடவுள்' படத்தில்இவர் நடிக்காமல் விலகியது, இவரின்புத்திசாலிதனத்திற்கு அடையாளம். நிச்சயம் இவர் உழைப்பு அந்தபடத்தில் வீணடிக்கப்பட்டிருக்கும். ஆனால் அதன்பின் கதைகளைதேர்ந்தெடுப்பதில் இவர்தடுமாறியதன் விளைவே திருப்பதி,பரமசிவன், ஆழ்வார் போன்ற திரைப்படங்கள்...

எது எவ்வாறெனினும் இவரிடம் இயல்பாகவே அமைந்திருக்கிறதுமெத்தட் ஆக்டிங் (Method Acting). கதாப்பாத்திரத்தை உள்வாங்கி வெறும் முகபாவங்களிலேயேரசிகர்களை கொள்ளைக்கொள்கிறது இவரின்ஆர்ப்பாட்டமில்லா நடிப்பு. உலக அளவில் தலை சிறந்த Al Pacino. Robert De NIro போன்றோர்களின் நடிப்பிற்க்கு இணையானது இவருடைய நடிப்பு திறன்....

தமிழ் சினிமாவை அடுத்த தளத்திற்கு எடுத்து செல்லும் பொறுப்பு வெறும் படைப்பாளிகளை மட்டும் சார்ந்ததன்று.அதில் 'அஜித்' போன்ற மெத்தட் ஆக்டர்களின் பொறுப்பு மிக முக்கியமானது. அதற்க்கு அவரை ஒழுங்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.நல்ல திறமைகளை வீணடித்ததற்கு,வீணடிப்பதற்கு தமிழ் சினிமாவிற்கு நிகர் தமிழ்சினிமாவே. உலக அளவில் மார்லன் ப்ரண்டோவாக உருவெடுத்திருக்க வேண்டிய சிவாஜி கணேசன் பின்னாளில் வீணடிக்கப்பட்டார் என்பதே நிதர்சனமான உண்மை. நவரச நாயகன் கார்த்திக், இளைய திலகம் பிரபு போன்ற சிறந்த நடிகர்கள் தமிழ் சினிமாவின் பாதையில் காணமல் போனார்கள்.

பக்கம் பக்கமாக பஞ்ச் வசனம் பேசும் நடிகர்களும், இறுதிக் காட்சியில் கேமரா நோக்கி அழுவதும், உரக்க வசனம்பேசுவதுமே நடிப்பு என நம்பும் நடிகர்களும் நிறைந்த தமிழ் சினிமாவில், அஜித் போன்ற உன்னத நடிகர்கள் பாதுகாக்கப் பட வேண்டியவர்கள்... 'அஜித்' என்ற இந்த கலைஞன் சரியாக பயன்படுத்திக் கொள்ளப் பட்சத்தில் உலக சினிமாவில் இந்த தமிழ் நடிகன் தலை நிமிர்ந்து நிற்பான், தமிழ்சினிமாவை தான் தோளில் தாங்கியாவரே...

நல்ல படங்களை கொடுக்கும் பொறுப்பு படைபாளிகளுடையதெனில், அதை கேட்டு வாங்கி ஆதரிக்கும் பொறுப்பு ரசிகர்களுடையது ...

கடந்த இருபது வருடத்தில் தமிழ் சினிமா கண்ட முக்கிய நடிகன் அஜித் என்பது யார் ஏற்க்க மறுத்தாலும் நிலைக்கக் கூடிய உண்மை... ஆனால் அந்த நடிகன் மீண்டும் மீண்டும் ஏதோ ஒருவகையில் வீனடிக்கப்படுகிறான். திரைக்கதை சோடை போகுபோது அதில் நடித்த நடிகர்களின் நடிப்பு வீணாய் போவதை தவிர்க்கமுடிவதில்லை. ‘அஜீத்’ இத்திரைப்படத்தை தன் தோளில் சுமந்திருந்தாலும், குழப்பமான ஒரு திரைக்கதையால் இதனை சிறந்த படமாக கருத முடியவில்லை...

அரவிந்த் சச்சிதானந்தம்

படத்தின் ஒளிப்பதிவு, படத்தொகுப்பு என பல பாராட்டக் கூடிய விடயங்கள் உண்டு. ஆனால் திரைக்கதை என்ற முதுகெலும்பு உடையும் போது, மற்ற நல்ல விடயங்களும் கட்டாயத்தால் சுக்குநூறாகி விடுகிறது.. இந்த படத்தின் 'மேக்கிங்' மிக மிக அருமை.கோடிகளை இறைத்து எடுக்கபடும் படங்களில் 'மேக்கிங்' நன்றாக அமையாமல் இருந்தால் தான் ஆச்சர்யம்…

பல கவர்ச்சி காட்சிகளையும், கொலை காட்சிகளையும் 'க்ளோஸ்-அப்' ஷாட்டில் எடுத்துள்ள இயக்குனரின் 'தில்'லை பாராட்டிட வேண்டும். அதனால் தான் படத்திற்க்கு 'A' சான்றிதல் வழங்கியுள்ளனர். ஆனால் 'ஏ' சான்றிதல் படத்திற்க்கு வரும் எந்த ஒரு ரசிகனையும் தடுத்து நிறுத்தாது என்பதை இன்னும் தங்களை கலாச்சார காவலர்களாக கருதிக் கொள்ளும் 'தமிழ்நாடு தணிக்கை குழுவினர்' உணரமறுக்கின்றனர். (இவர்கள் பருத்திவீரன், ஆரண்ய காண்டம் போன்ற உன்னதமான பதங்களுக்கும் 'ஏ' சான்றிதல் வழங்கியவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.)

ஹிந்தி சினிமாவில் 'Hate story', 'Gangs of wassaypur' போன்ற படங்களை மிக தைரியமாக எடுக்கின்றனர். 'Jalla Wallah' 'I am a Hunter' போன்ற இரட்டை அர்த்த பாடல்களை 'தில்'லாக எழுதுகின்றனர்.அவர்களின் அடாசிட்டி (audacity) பாராட்டுதலுக்குரியது. அதுபோன்ற அடாசிட்டியான கவர்ச்சி- கொலை காட்சிகளை ஹாலிவுட் பாணியில் இத்திரைப்படத்தில் வைத்து  அதை இறுதி வரை வெட்டி எறியாமல் தில்லாக படத்தை வெளியிட்ட இயக்குனரை நிச்சயம் பாராட்டிட வேண்டும்.

படம் முழுக்க நிரம்பிக்கிடக்கும் அருமையான வசனங்களுக்காக வசனகர்த்தா விற்க்கு பாராட்டுக்கள். படத்தொகுப்பு சில-பல இடங்களில் 'Rock & Rolla' , 'Shoot'em up' போன்ற படங்களை நினைவு படுத்தினாலும், பிசிர் இல்லாமல் மிகவும் அருமையாக படத்தை தொகுத்துள்ளதால் படத்தொகுப்பாளரையும் பாராட்டிடுவோம்.

படம் முழுக்க இருவர் மட்டுமே துப்பாக்கியை வைத்து சுட்டுக் கொண்டு திரிவது கொஞ்சம் ஓவர். ஒரு காட்சியில் ஸ்டைலாக பில்லா நடந்து வருவார். பின்னாடி குண்டு வெடிக்கும். கடைசியாக இந்த காட்சியை வல்லரசு படத்தில் பார்த்ததாக ஞாபகம். கடந்த சில வருடங்களாக தமிழ் சினிமா தவிர்த்திருந்த 'funny Build up' காட்சிகள் அவை.அந்த காட்சிகளை மீண்டும்  இந்த படத்தில் புகுத்தியுள்ளனர்.

எந்த திரைக்கதையானாலும் அதனுள் தேவையில்லாத கதாப்பாத்திரங்களை நுழைத்திடக் கூடாது.ஒரு காட்சியில் கதைக்கு சம்பந்தமில்லாமல் ரோட்டில் செல்லும் ஆயிரம் நபர்களை காட்டலாம். ஆனால் கதைக்கு தேவையேயொழிய அவர்கள் யாரும் வந்து கதை மாந்தர்களுடன் உரையாடக் கூடாது.கதைக்கு தேவையில்ல கதாப்பாத்திரங்கள் இப்படத்தில் நிரம்பிக் கிடக்கின்றன.

முதல் பாகத்தோடு படத்தினை இணைக்க வேண்டும் என்பதற்காக 'ஜகதீஷ்' கதாபாத்திரம் வந்துவிட்டு போகும்.அதேபோல் எதுவும் செய்யாமல் கவர்ச்சி காட்ட

இரண்டு கதாநாயகிகள். (பெரும்பாலான  தமிழ் சினிமாவில் கதாநாயகிகள் இன்னும் பாடல் காட்சிகளுக்கு மட்டுமே பயன் படுகிறார்கள் ). Scarface  படத்தில் அம்மாவாக வரும் கதாபாத்திரம் இதில் அக்காவாகவும், தங்கச்சியாக வரும் கதாபாத்திரம் இதில் அக்கா பெண்ணாகவும் வருகின்றனர். இதில் ஒரு வசனம் பேசுவதற்காக மட்டும் வந்துவிட்டு செல்கிறது அக்கா கதாபாத்திரம்.

'scarface '  திரைப்படத்தில் டோனி மோன்டனா எவ்வளவு 'ஆட்டிட்யுட்' நிறைந்தவர் எனக் காட்டி, இறுதில் அதே ஆட்டிட்யுடன் மாண்டு போவதை போல் கதையை அமைத்திருப்பார்கள். 'scarface ' கதையை எவ்வளவு அரைவேக்காடாக எடுக்க இயலுமோ அவ்வளவு அரைவேக்காடாக எடுத்திருக்கிறார்கள் பில்லா II திரைக்கதையாசிரியர்கள்.

இங்கு ஒரு ஆங்கிலப் படத்தின் கதையை வீணடித்ததற்காக மட்டும் வருத்தப் படவில்லை. 'அஜித்' போன்ற ஒரு தலை சிறந்த நடிகனை மீண்டும் மீண்டும் வீணடிப்பது மேலும்  வருத்தமளிக்கிறது.  Al Pacino, Robert De Niro, Jack Nicholson போன்று ஒரு சிறந்த நடிகராக அஜித் உருவேடுக்கவேண்டுமென்றால் Scorcese, Coppala போன்ற இயக்குனர்கள் இங்கு நிச்சயம் தேவை. இல்லையேல் மென்மேலும் விக்ரம், அஜித், சிம்பு போன்ற சிறந்த நடிகர்களின் திறமை வீணடிக்கப் பட்டுக் கொண்டிருக்கும். (வருகால தமிழ் சினிமாவின் 'ப்ராமிசிங் ஹீரோக்கள்' இவர்கள் மூவரும் என்பதை யாராலும் மறுக்க இயலாது..)

நல்ல படங்களை கேட்டு வாங்க வேண்டிய பொறுப்பு ரசிகர்களுடையது. 'வழக்கு எண் ' போல முத்தாய்பாக வரும் தரமான படங்களை கொண்டாடிட வேண்டும். அதை இங்கு செய்ய மறுக்கிறார்கள். தான் இன்னாரின் ரசிகன் என மார்த்தட்டிக் கொண்டு பிற நடிகர்களின்  ரசிகர்களிடம்  சண்டை பிடிப்பதே அவர்களின் வேலையாகி விட்டது. ரசிகர்களால் தான் படம்  ஓடுகிறதென்றால் , 'பாபா' படம் சக்கை போடு போட்டிருக்க வேண்டும். திரு. ரஜினிகாந்திற்கு இருக்கும் அளவிற்கு ரசிகர்கள் வேறு எந்த நடிகர்களுக்கும் இல்லை. ‘Autobiography of Yogi’ என்ற புத்தகத்தை தழுவி எடுக்கப்பட்ட ஒரு நாகரிகமான படம் பாபா. அதில் திரு.ரஜினிகாந்த் சொல்ல வந்த நல்ல விடயங்கள் ஏராளம்.  ஒதுக்கி தள்ளும் அளவிற்கு அது மோசமான படம் இல்லை. எனினும் பெரும்பாலனோர் அந்த படத்தை ரசிக்கவில்லை (அன்பே சிவம் போன்ற  உன்னத படங்களையே நாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது நினைவில் இருக்கலாம்). அதனால் ரசிகர்களால் தான் படம் ஓடுகிறது என்பது மாயை. ஏனெனில், ரஜினிக்கு அடுத்து அதிக ரசிகர்கள் படைத்த அஜித் அவர்களின் எல்லா படங்களும் ஓடி இருக்க வேண்டும். அவ்வாறு நிகழவில்லை என்பதை நாம் அறிவோம். ரசிகர்களையும் மீறி ஜனரஞ்சக சினிமா ரசிகர்கள்தான் படத்தின் வெற்றி-தோழ்வியை நிர்ணயிக்கிறார்கள். (பல நேரங்களில் அவர்கள் 'மொக்கை' படங்களை வெற்றியடைய செய்கிறார்கள் என்பது வேறு விடயம் )

அரவிந்த் சச்சிதானந்தம்

அதனால் வெறும் நடிகர்களின் ரசிகர்களாக மட்டுமில்லாமல் நல்ல சினிமாவின் ரசிகர்களாக படம் பார்க்கும் அனைவரும் இருக்கும் பட்சத்தில், தமிழில் நல்ல படங்கள் வந்து குவியும். நல்ல நடிகர்களின் திறமைகளும் வீணடிக்கப்படாது. நல்ல படங்களை மட்டும் தேர்ந்தெடுத்து நாம் ஆதரிக்கும் பட்சத்தில் அந்த படங்களின் புகழ் வளர்ந்து இந்திய அளவில் சென்றடையும். தமிழின் தலை சிறந்த படங்கள் அனைத்தும் இந்திய அளவில் எடுத்து செல்லப் பட வேண்டும். அதற்க்கு நாம் நல்லப் படங்களை மட்டும் கொண்டாடவேண்டும்

தென்னிந்தியாவிற்கு வெளியே இருப்பவர்கள் பெரும்பாலோனருக்கு தமிழ் படத்திற்கும், தெலுங்கு படத்திற்கும் வித்தியாசம் தெரியாது. அவர்கள் அனைவரும் வெறும் அதிரடி மசாலா தெலுங்கு படங்களை பார்த்து விட்டு, அதுதான் ‘South Movies’ என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதில் பல மசாலா தெலுங்கு படங்கள் ஹிந்தியில் டப் செய்யப் படுகிறது. அதனோடு சேர்த்து 'சுள்ளான்' 'கஜேந்திரா' போன்ற படங்களை டப் செய்து அன்றாடம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பிக் கொண்டிருக்கிறார்கள். (காலக் கொடுமை !)

‘Tere Naam’ என்ற ஒரு அருமையான ஹிந்தி படத்தை பாராட்டி பேசும் பலருக்கும், அது 'சேது' என்ற பெயரில் பாலாவால் தமிழில்தான் முதலில் செதுக்கப்பட்டது என்ற உண்மை தெரிந்திருக்கவில்லை. தலைசிறந்த இயக்குனர்கள் இங்கிருப்பதை அவர்கள் யாரும் அறியவில்லை. 'சிங்கம்' 'சிறுத்தை' போன்ற படங்களே இங்கு எடுக்கப் படுவதாக அவர்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவின் ‘Finest actors’ தமிழில்தான் இருக்கிறார்கள் என்பதும் யாருக்கும் தெரியாது.

இதை மாற்றுவது ரசிகர்களின் கடமை. வெற்றி , தோல்வி, பாக்ஸ்-ஆபிஸ் என்பதை பற்றி யாரும் அலட்டிக் கொள்ளவேண்டியதில்லை. ஆனால் , ‘Fanaticism’ என்ற போர்வையில் நமக்குள்ளேயே அடித்துக் கொள்வதை நிறுத்திவிட்டு நல்ல படங்களை கொண்டாடிட வேண்டும். பிற மாநிலத்தாருக்கு அப்படங்களை அறிமுகப் படுத்திட வேண்டும். நல்ல படத்தினை ரசிகர்கள் கொண்டாடிடும் பட்சத்தில், அந்த படத்தை படைத்த படைப்பாளி மென்மேலும் நம்பிக்கைப் பெற்று அந்த படங்களை இந்திய அளவில் கொண்டு செல்ல முயற்சிப்பான். அவ்வாறு எடுத்துச் செல்லும் பட்ச்சத்தில் தமிழ் படைப்பாளிகள், கலைஞர்களின் மதிப்பு மென்மேலும் உயரும். ஒரு சமுகத்தின் படைப்பாற்றல் அச்சமுகத்தின் மக்களின் வாழ்வு நிலையை பொருத்தது என்பதால், நல்ல தமிழ் படங்கள் இந்திய அளவில் அங்கிகாரம் பெறும்போது அந்த படத்தின் ரசிகர்களாகிய தமிழர்களின் பெருமையும் உயரும்.

தலை சிறந்த படங்களை தந்துக்கொண்டிருந்த வங்காள, மராத்திய திரைத்துறைகள் இப்போது தூங்கிவிட்டது. எதார்த்த படங்களை தந்துக் கொண்டிருந்த மலையாள சினிமாவும் இப்போது பெரிதாக பாரட்டிடும்படி செயல்ப்படவில்லை. ஹிந்தியில் எடுக்கப்படும் பெரும்பாலான படங்கள் 'மொக்கை' படங்களே. அதனால் இந்திய

அளவில் தலை சிறந்த படங்களை படைக்கும் திறமை இப்போது தமிழ் சினிமாவிற்கு மட்டுமே இருக்கிறது என்பதை நினைவில் கொள்வோம். நல்லப் படங்களை மட்டுமே ஆதரித்து கொண்டாடும் பொறுப்பு தமிழ் ரசிகர்களுடையது என்பதை கருத்தில் கொள்வோம்..

அதனால் 'பில்லா-2' போன்ற சராசரி படங்களை கொண்டாடிக் கொண்டும், நமக்குள்ளேயே அடித்துக்கொண்டும் இருக்காமல், அஜித் போன்ற உன்னத நடிகனை வைத்து நல்ல படங்களை இயக்கிட வேண்டும் என்று படைப்பாளிகளை வற்புறுத்துவோம். மாற்று சினிமாவினை வரவேற்றிடுவோம். அவ்வாறு நாம் நல்ல படங்களை கொண்டாடிடும் பட்சத்தில், ஒரு நல்ல நடிகனின் திறமை வீணடிக்கப் படாத பட்சத்தில் , தமிழ்நாட்டிலிருந்து ஒரு ‘Al Pacino’ உருவாவதை யாராலும் தடுக்க இயலாது...

அரவிந்த் சச்சிதானந்தம்

## வழக்கு எண் 18/9

சினிமா என்பது 24 lies per second (24 பொய்கள்) என்று ஒரு பெரிய இயக்குனர் குறிப்பிட்டார்.அவ்வாறிருக்கவேண்டிய அவசியமில்லை, சினிமாவில் சினிமாத்தனம் கலக்காத எதார்த்தமும் சாத்தியம் என்பது உலக சினிமா அறிந்தவர்களின் கருத்து. அந்த கருத்து மீண்டும் ஒரு முறை தமிழ் சினிமாவில் நிரூபிக்கப் பட்டிருக்கிறது, வழக்கு எண் 18/9 என்ற ஒரு உன்னத படைப்பின் மூலம்....திரைக்குப் பின் பணிப்புரிந்திருக்கும் தேர்ந்த படைப்பாளிகள், திரையில் வெறும் புது முகங்களை உலாவவிட்டு ஒவ்வொரு காட்சிகளையும் செதுக்கி இருக்கிறார்கள்.

ஒளிப்பதிவு

முதல் சில காட்சிகளுக்கு பின் சில unusual கேமரா மூவ்மெண்டுகளுடன் படம் நகரத் தொடங்குகிறது.அதுவே படத்தின் மீது ஒரு புது வகையான பிரமிப்பை ஏற்ப்படுத்துகின்றது. அந்த பிரமிப்புகளையும் எதிர்ப்பார்புகளையும் இறுதிவரை தக்க வைத்துக் கொள்ள பெரிதும் மெனக்கெட்டிருக்கிறார் ஒளிப்பதிவாளர், அதில் வெற்றி பெற்றும் இருக்கிறார்.சிறந்த கதை அம்சம் கொண்ட படங்களில், தொழில்நுட்ப அம்சங்கள் வியக்கத்தக்க வைக்கும் அளவிற்க்கு இருக்க வேண்டியதில்லை என ஏனோ இங்கு நம்பப் படுகிறது. பல நல்ல கதை கொண்ட திரைப்படங்கள் வெறும் நாடக பாணியில் அமைந்திருப்பது நினைவிருக்கலாம். அந்த குறுகிய நம்பிக்கைகளை அவ்வப்போது சில படைப்பாளிகள் உடைத்துக் கொண்டிருக்கின்றனர். ‘கற்றது தமிழ்’ போன்ற திரைப்படங்கள் கதையம்சம், மேக்கிங் என அனைத்திலும் உலகத்தரம் வாய்ந்த ஒன்று. அந்த வரிசையில் நாம் வழக்கு எண் 18/9 படத்தை இணைத்திடலாம்.

புதிய தொழில்நுட்பங்கள் அவ்வப்போது பலரால் தமிழ் திரையுலகில் அறிமுகப் படுத்தப் படுகிறது. பல புதிய முயற்சிகள் மேற்க்கொள்ள படுகின்றன. ஆனால் அந்த முயற்சிகள் நிச்சயம் தமிழ் சினிமாவை அடுத்த தளத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.அவ்வாறு இல்லாத பட்சத்தில் அந்த முயற்சிகள் வீணாகிப் போவதை தடுக்கவோ தவிர்க்கவோ இயலாது. ஒரு முக்கிய அந்நிய தொழிற்நுட்பத்தை ஒரு இயக்குனர் பல கோடி செலவு செய்து இங்கு அறிமுகப் படுத்துகிறாரென்றால்,அவர் பெருமை பட்டுக் கொள்ளலாமேவொழிய அம்முயற்சியால் யாதொரு பயனும் விழையாது. காரணம், பல கோடி மூலதனம் எனும் பட்சத்தில் எல்லாராலும் அம்முயர்ச்சியை பின்பற்ற இயலாது.

“புதிய முயற்சி என்ற பெயரில், வெறும் அறியாமையினால் 30 வருடதிர்க்கு முன் எங்கோ-எவரோ செய்த ‘புதிய’ முயற்சியை செய்திடாதீர்கள்” என்கிறார் ஜோசப் வீ மாசலி என்ற ஒளிப்பதிவாளர். புதிய முயற்சி என்ற பெயரில் ஏதோ ஒன்றை செய்திடக் கூடாது என்பதே அவரின் கருத்து.

அதே சமயத்தில் எளிதாக அனைவராலும் பின்பற்றக் கூடிய முயற்சிகள் ஒழுங்காக-சரியானவர்களை சென்றடையாத பட்சத்தில் அந்த முயற்சிகளும் வீண்.

டிஜிட்டல் ஒளிப்பதிவு, ரெட் ஒன் காமிரா உபயோகம் என பல முயற்சிகள் இங்கு மேர்க்கொள்ளப் படுகின்றன. மும்பை எக்ஸ்பிரஸ், தவமாய் தவமிருந்து, அச்சமுண்டு அச்சமுண்டு என பல படங்களை ஒளிப்பதிவில் புதுமை செய்ததற்க்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.ஆனால் 'வழக்கு எண் 18/9' என்ற படத்தில் மிகவும் பாராட்டுதலுக்குறிய ஓர் முயற்சி செய்யப்பட்டுள்ளது. Canon EOS 7D என்ற விலை அதிகமில்லா ஒரு DSLR கேமராவினை உபயோகப் படுத்தியுள்ளனர். இது எல்லோராலும் எளிதாக பின்பற்ற முடிந்த ஒன்று.

DSLR கேமராவில் எடுக்கப் பட்ட இரண்டாவது தமிழ் படம் இது. முதல் படம், சனிக்கிழமை சாயங்காலம் ஐந்து மணி....

'வழக்கு எண் 18/9' படத்தில் ஒளிப்பதிவில் செய்யப்பட்ட இம்முயற்சி வெற்றிப் பெற்றுருக்கிறது. இது நிச்சயம் பல திறமைசாலிகளுக்கு சொர்க்க வாசலை திறந்து விட்டுருக்கிறது. இனி நிறைய சுயாதீன திரைப் படைப்பாளிகள் குறைந்த செலவில் நிறைய தரமான படங்களை தரப் போகிறார்கள் என்பது உறுதி...அதற்க்கு காரணமாய் அமைந்த இப்படக் குழுவினை பாராட்ட வேண்டியது ஒவ்வொரு ரசிகனின் கடமை.

திரைக்கதை

ஒரு எளிமையான கதை கருவிற்கு, ஆழமான திரைக்கதை எழுதிடுவது சாதரணமான விடயமன்று. மிகவும் தேர்ந்த திரைக்கதையாசியரால்தான் அது சாத்தியப்படும். இப்படத்தின் திரைக்கதையாசியர் தன் திறமையை மீண்டும் நிருபித்திருக்கிறார். அவர் தனது முந்தைய படங்களில் எழுதிய அருமையான திரைக் கதைகளைவிட, இத்திரைக்கதை இன்னும் ஆழமாக-அழகாக அமைந்துள்ளது.

பல வருடங்களாக இயங்கிக் கொண்டிருக்கும் 'ஹாலிவுட்' திரையுலகிலேயே யாரும் 'ஒரிஜினல் திரைக்கதைகள்' எழுதிடுவதில்லை.அங்கு எழுதப்படுவது பெரும்பாலும் தழுவல் திரைக்கதைகளே. ஆனால் தமிழ் படைப்பாளிகளால் மிகவும் எளிதாக 'ஒரிஜினல் திரைக்கதைகள்' எழுதிட முடியும்.திரு.பாக்கியராஜ் போன்றோர்கள் அதற்க்கு உதாரணம்.அதை நினைத்து நாம் நிச்சயம் பெருமைபட்டுக் கொள்ளலாம்...

இரண்டாவது பாதியில் திரைக்கதை, காட்சிகளை விளக்குவதற்கு சற்று நேரம் பிடிக்கிறது. அதை வைத்து இது 'மெதுவாக நகரும் திரைக்கதை' என யாராலும் குற்றம் சாட்டமுடியாது. இப்படமே இரண்டு மணிநேரம் தான் என்பது நினைவிருக்கட்டும். கதையின் ஓட்டத்தை பொறுத்து காட்சிகளை ஆழமாக விளக்கும் பொறுப்பும் உரிமையும் படைப்பாளிக்குண்டு.(உலகின் தலை சிறந்த படமாக கருதப்படும் 'செவன் சாமுராய்' படம் கிட்டதட்ட நான்கு மணி நேரம் ஓடும்.) இந்த படத்தில் அதிக நேரம் எடுத்துக் கொள்ளப் படவில்லை,சுருங்க-விளங்க சொல்லியிருப்பது சிறப்பம்சம்.

அரவிந்த் சச்சிதானந்தம்

ஹிந்தியில் வெளிவந்த 'சலாம் பாம்பே' திரைப்படத்திற்கு பின் தெருவோர-சேரி மனிதர்களை பற்றிய சினிமாத்தனமில்லா சினிமா இதுவே. கற்பனை செய்துகொள்ளுங்கள். இயக்குனர் நினைத்திருந்தால் மசாலா காட்சிகளை புகுத்தி இருக்கலாம். இரண்டு சேரி நண்பர்கள். அவர்கள் 'காபரே நடனம்' பார்க்கிறார்கள் என்று காட்சி அமைத்து ஒரு 'ஐட்டம் நம்பர்' பாடலை சொருகி கல்லாவை நிரப்ப முயற்சித்திருக்கலாம். ஆனால் அந்த போலித்தனங்களை செய்யாததே அவர் ஒரு உன்னத படைப்பாளி என்பதற்கு சான்று. ஒரு படைப்பாளியின் முயற்சிகளும்-சிந்தனைகளும் தூய்மையாக இருக்கும் பட்சத்தில் படைப்புலகில் அவனுக்கொரு நிரந்தர-உயர்ந்த இடம் வந்து சேர்வத்தை யாராலும் தடுக்க இயலாது .

இசை

'லைவ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ்' என டைட்டிலில் பிரத்யேகமாக குறிப்பிட்டிருக்கிறார்கள், அதற்க்கு நியாமும் செய்திருக்கிறார்கள். கதையின் தேவையை மட்டும் உணர்ந்த இசை. ஆடம்பரமற்ற அந்த இசை ஒரு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

இசையில் பல உலகத் திறமைகள் கை கோர்த்திருக்கிறது என்பது தெளிவு. இசை சற்று வித்தியாசமாக அமைந்திருப்பது படத்தின் பெரிய பலம்.

சமகால தமிழ் திரை உலகில் நம்பிக்கைக்குரிய ஓர் பாடலாசிரியர், நா.முத்துக்குமார்..வைரமுத்து, வாலி வரிசையில் அடுத்த இடம் பிடிக்க எல்லாத் தகுதிகளையும் பெற்றவர்.காதலியை தேவதை, உலகழகி  என வர்ணித்து வந்துக் கொண்டிருந்த பாடல்களுக்கு மத்தியில் ‘அவள் அப்படி ஒன்றும் அழகில்லை, அவளுக்கு யாரும் இணையில்லை’ என்று முத்தாய்ப்பாக அவர் எழுதிய சரணம் நினைவிருக்கலாம்.அவரே இந்த படத்திற்க்கும் பாடல்களை எழுதியுள்ளார், மீண்டும் முத்தாய்பான வரிகள்.

"வானத்தையே எட்டி பிடிப்பேன் " என்ற எளிமையான வரிகளால் வலிகளின் ஆழங்களை விளக்குகிறார் பாடலாசிரியர்.

நடிகர்கள்

சினிமா என்பது ஒரு கூட்டு முயற்சி. திரைக்கு பின் இருப்பவர்கள் எவ்வளவு திறமைசாலிகளாக இருந்தும், திரையில் உலாவும் நடிகர்கள் தங்கள் பணியை ஒழுங்காக செய்யாத பட்சத்தில் வெற்றியை சுவைத்திட முடியாது. எல்லோரும் திறம்பட வேலை செய்தும் எல்லோருக்கும் அங்கிகாரத்தை பகிர்ந்தாளிக்காமல் விடுவது கலைஞர்களுக்கு சமுதாயம் செய்கிற துரோகம்.

பருத்தி வீரன் படத்தில் நடிகர்களை கண்டுகொண்டவர்கள், இயக்குனரை அங்கீகரிக்க மறுத்துவிட்டனர். நான் கடவுள் படத்தில் இயக்குனரை கண்டுகொண்டவர்கள், அதில் சிறு வேடமேனினும் பெரிதாய் நடித்த நடிகர்களை பாராட்ட மறந்துவிட்டனர்.

போதி தர்மர் முதல் ஜேம்ஸ்பாண்ட் வரை

இப்படத்தில் திரைக்கு பின்னால் சிறப்பாக உழைத்தவர்களை போன்று, திரையில் நடித்த அனைவரும் தங்கள் வேலையை உணர்ந்து செவ்வன செய்துள்ளனர். மனித வாழ்க்கையில் நாம் சந்திக்கும் பலவகையான மனிதர்களை நாம் இங்கு கதாப்பாத்திரங்களாக சந்திக்கலாம்.

எத்தனை வகையான மனிதர்கள்! "கொஞ்ச வருஷம் வேலை செஞ்சா கடனை அடச்சிடலாம்" என்று கூறி சிறுவனை வடநாட்டிற்கு அழைத்து செல்லும் புரோக்கர்.

"கொஞ்சம் வருஷம் ஜெயில இருந்த போதும்" என்று கூறி இளைஞனை ஜெயிலுக்கு அழைத்துசெல்லும் போலீஸ்காரர், என நிறைந்திருக்கும் குரூரமான மனிதர்கள்.

தெருவில் விழுந்துகிடக்கும் ஒருவனுக்கு உணவு வாங்கித்தரும் விலைமாது, பின் ஒரு காட்சியில் அவன் தரும் பணத்தினை தயக்கத்துடன் பெற்று கொள்ளும் அதே பெண், 'நீயும் கல்யாணம் காட்சி பண்ணி நல்லா வாழ வேணாமா' என்று சொல்லும் தள்ளு வண்டிக்காரர், 'நான் கடைசி வரைக்கும் உன் கூடவே இருக்கணும் நண்பா' எனக் கூறும் கலைக் கூத்தாடி நண்பன், தன் பெண்ணை காப்பாற்ற எந்நேரமும் கத்திக் கொண்டே இருக்கும் தாய் என படம் முழுக்க நிறைந்திருக்கிறார்கள் விளிம்பு நிலை மனிதர்கள். அக்கதாப்பாதிரங்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள் அத்தனை நடிகர்களும்.

இது ஒரு புறம் இருக்க, செல்போனிற்க்காக அலையும் பள்ளி மாணவி, தடம் மாறி திரியும் பணக்கார மாணவன் என உயர்குடி மனிதர்கள் இன்னொரு புறம். இரண்டு வாழ்க்கைத்தரங்களுக்குள்ள முரண்பாடு இங்கு காட்டப் படுகிறது. இங்கு இவர்கள் இப்படி, அவர்கள் அப்படி என்ற கம்யுனிச உபதேசம் செய்யப்படவில்லை.இரண்டு வகையான மனித வாழ்கையை அப்பட்டமாக படம் பிடித்திருக்கிறார்கள். அதில் இருக்கும் முரண்கள் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் உரைக்கும்... (Gods must be crazy என்றொரு ஆங்கிலபடத்தில் காட்டுவாசிகளுக்கும் நகர மனிதர்களுக்கும் இருக்கும் முரண் அருமையாக படம்பிடிக்கப் பட்டிருக்கும். அதை பார்க்கும் போதும் மனிதக் குளத்திலுள்ள வேறுபாடுகள் உரைக்கும்..)

படத்தில் அனைத்து கதாபாத்திரங்களும் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். குறிப்பாக இரண்டு கதாநாயகிகள், தெருவோர இளைஞனாக நடித்திருக்கும் ஓர் கதாநாயகன், அவனின் நண்பனாக நடித்திருக்கும் ஒருவர்- இந்த நால்வரும் கதையை முன்னெடுத்து செல்வதில் பெரும் பங்காற்றியிருக்கிறார்கள்.

வேலைக்கார பெண்ணாக வருகிறார் ஒரு கதாநாயகி. பார்வையாலேயே நாயகனை வெட்டுவதே இவர் வேலை. வசனங்கள் இவருக்கு மிகக் குறைவு. ஆனால் இவரின் பார்வைகளும் முக அசைவுகளும் ஆயிரம் வசனங்கள் பேசுகின்றன.

பள்ளிகூட மாணவியாக வரும் இன்னொரு கதாநாயகியும் போட்டி போட்டுக் கொண்டு நடித்துள்ளார். ஆசையும் பயமும் ஒருங்கே நிறைந்த ஒரு கதாப்பாத்திரம். வீட்டில் நிலவும் கட்டுபாடுகள், அதை உடைக்க தூண்டும் ஆசைகள், அதன் பின் எழும்பும் பயத்தினை வெளிப்படுத்தும் விதம் என தனி முத்திரைப்பதிக்கிறார்.

அரவிந்த் சச்சிதானந்தம்

வேலு என்ற கதாபாத்திரத்தில் வாழ்ந்திருக்கும் கதாநாயகன் உணர்வுபூர்வமான நடிப்பினை வெளிப்படுத்தியிருக்கிறார். தாயை நினைத்து அழும் காட்சி தொடங்கி, இறுதியில் காதலிக்காக அழும் காட்சி வரை இவர் நடிப்பு நெஞ்சைத் தொடுகிறது. கண்களை பணிக்க வைக்கும் அருமையான நடிப்பு. ஆர்பாட்டமில்லா நடிப்பு. சும்மா ஒருவர் அழுதுக் கொண்டிருந்தால் அது அளுகாச்சி படமாக ஆகியிருக்கும். ஆனால் அவ்வாறு அவர் செய்யவில்லை. தன் கதாப்பாதிரத்தை முழுவதுமாக உணர்ந்து தெளிவாக செயற்பட்டிருக்கிறார்.பல இடங்களில் வேலு கதாபாத்திரம் கதையை தன் தோளில் சுமக்கிறது என்றால் அது மிகையல்ல. வருங்காலத்தில், ஒழுங்காக பயன்படுத்திக் கொள்ளப்படும் பட்சத்தில் இவர் சிறந்த நடிகராக உருவெடுத்திடுவார் என நம்பலாம்....

படத்தில் இழையோடும் ஒரு வகையான 'ப்ளாக் ஹியூமருக்கு' வழிவகுத்திருப்பது கதாநாயகனின் நண்பன் கதாபாத்திரம். படத்திற்கு மிக முக்கியமான துணைக் கதாப்பாத்திரம் அவர்…

காட்சிகளின் பின்னியில் சிலஇடங்களில் ஒலிக்கும் பழைய பாடல்கள் காட்சிகளுக்கு மேலும் மெருகேற்றுகின்றன. இத்திரைப்படம் ஒவ்வொரு காட்சியாக செதுக்கப்பட்டுள்ளது என்பதற்கு இதுவே உதாரணம்…

தமிழ் திரையுலகில் திடிரென ஒரு இயக்குனர் நல்ல படம் கொடுப்பார். அதில் நடிகரும் நன்றாக நடித்திருந்தால் படம் சிறந்த படமாக வந்திடும். பின் காலப் போக்கில் நடிகர் ஆக்சன் ஹீரோவாக உருவெடுக்க தடமாறி தடுமாறி சென்றிடுவார்.அந்த

இயக்குனரோ புத்திசாலியாக இருக்கும் பட்சத்தில் தன் இடத்தை தக்க வைத்துக்கொள்வார். இல்லாவிடில் அவரும் காணமல் போய்விடுவார். பல ஜாம்பவான்களை வைத்துபடம் இயக்கிய பல இயக்குனர்கள் தமிழ் சினிமாவின் வெள்ளத்தில் அடித்துசெல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த படத்தின் இயக்குனரை பற்றி அந்தக் கவலை வேண்டாம். சிட்டிசன் என்ற ஒரு படம் வெளிவரயில்லையெனில் சாமுராய் நிச்சயம் வெற்றி பெற்றிருக்கும். ஆனால் அதன்பின் இவர் துவளாது ‘காதல்’ போன்ற அருமையான படைப்புகளை கொடுத்திருக்கிறார். வருங்காலத்திலும் அதுபோன்ற நல்ல படைப்புகளை அவர் கொணர்வார் என நம்புவோம்..

இயக்குனரும், நடிகரும் தடுமாறும்பட்சத்தில் அவர்கள் தந்த சிறந்த படைப்பும் காற்றில் கரைந்து போகும்....ஆனால் சில படங்கள் மட்டுமே யார் எப்படி சென்றாலும் காலம் எப்படி சூழன்றாலும் தனக்கென ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்துக் கொள்ளும், உதிரிப்பூக்கள், பருத்திவீரன், கற்றதுதமிழ் போல..அவ்வாறான படங்களில் பணிபுரிபவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் அந்த படத்தின் பெயரோடு சேர்ந்து அவர்களின் பெயரும் நிலைத்திருக்கும். இத்திரைப்படமும் அவ்வாறான படமே.. இந்த படைப்பாளிகளும் கலைஞர்களும் இந்த உன்னதமான படைப்போடு சேர்ந்து வாழ்ந்துக்கொண்டிருக்கப்போகிறார்கள்...

போதி தர்மர் முதல் ஜேம்ஸ்பாண்ட் வரை

சிறந்த நடிகர்கள், சிறந்த ஒளிப்பதிவு படத்தொகுப்பு, சிறந்த தொழில்நுட்பம், சிறந்த திரைக்கதை-இயக்கம் என பல விஷயங்கள் சிறப்பாக அமையப்பெற்ற இப்படம் தமிழ் திரைபடவுலகில் மிக முக்கியமான படம் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

நாற்பது வருடங்களாக உதிராமல் குலுங்கிக் கொண்டிருக்கும் உதிரிப்பூக்கள் போல

இத்திரைப்படமும் இன்னும் பல ஆண்டுகள் நிலைத்து நிற்கப் போகிறது. இனிமேல் வரப்போகும் பல சுயாதீனப் படைப்புகளுக்கு ‘வழக்கு எண் 18/9’ என்ற இப்படமே முன்னோடி என்பதால், இப்படகுழுவினர் அனைத்து திசைகளிலிருந்தும் பாராட்டுகளுக்கு தகுதியானவாராகிறார்கள். இக்குழுவினரை மனவிட்டு பாராட்டிடுவோம்...

உலகத் திரைப்படவிழாவிற்க்கு செல்லும் தமிழ் படங்கள் அனைத்தும் இந்திய துணைக்கண்டத்தை ஒரேயடியாக தாண்டி விடுவதாலோயென்னவோ, தென்னாடிற்க்கு வெளியே தமிழ் படங்களை பற்றி யாருக்கும் தெரிவதில்லை.அந்த நிலையினை தமிழ் படைப்பாலிகள் மாற்ற வேண்டும். முதலில் இந்தியா முழுக்க இது போன்ற சிறந்த தமிழ் படங்கள் எடுத்துச் செல்லப் பட வேண்டும்.

ஒரு படைப்பின் வெற்றி மக்களின் ரசனையையே வெளிப்படுதுகிறது. தரமான படங்கள் தோற்பதும், மசாலா படங்கள் வெற்றி பெறுவதும் தாழ்ந்த ரசனையையே காட்டுகிறது. அவ்வாறான மசாலா தமிழ் படங்கள் சில இந்திய அளவில் முன்னமே உலவத் தொடங்கிவிட்டதால், தமிழ் திரையுலகின் மீது ஒரு வகையான கீழ்தர்மான பார்வையே படர்ந்துள்ளது.

‘வழக்கு எண் 18/9’ போன்ற ஒரு உன்னத படைப்பு இந்திய அளவில் எடுத்துச் செல்லப்படும் பட்சத்தில், இது இன்னொரு ‘பதேர் பாஞ்சாலி’ என கருதப்படும். தமிழ் படங்கள் மீதான மதிப்பு உயரும். இங்கு நிறைய தகுதியான படைப்பாளிகள் இருப்பதால், அவர்கள் சிறந்த தமிழ் படங்களை இந்தியா முழுக்க இனியாவது எடுத்து சென்று தமிழ் திரையுலகின் மதிப்பினை உயர்த்துவார்கள் என நம்புவோம்...

அரவிந்த் சச்சிதானந்தம்

# அரவான்

விமர்சனம் என்ற பெயரில் ஒரு திரைப்படத்தின் முழு கதையையும் விவரிப்பது, உலக சினிமாவின் உன்னத ரசிகனாகிய நான், என்னைப் போன்ற ரசிகர்களுக்கு செய்கிற துரோகம். அதே சமயத்தில் சில முக்கிய காட்சிகளை விவரிக்காமல் விமர்சனம் எழுதிவிடமுடியாது...

அருமையான ஒளிப்பதிவு ,படத்தொகுப்பு, கலைஇயக்கம், அருமையான நடிகர்கள் என்று பல அனுகூலமான விடயங்களிருந்தும் பல காரணங்களால் ' அரவான்' ஒரு சராசரி படமாகவே விளங்குகிறது.

உங்கள் நேரத்தை நான் வீணடிக்க விரும்பாததால், இதை சராசரி படம் என முன்னமே சொல்லிவிடுகிறேன். வலுவற்ற திரைக்கதையால், பல புது முயற்சிகள் இருந்தும் இதை தலைச் சிறந்த படங்களின்  வரிசையில் வைக்க முடியாததற்கான கட்டாயத்திற்கு நாம் ஏன் தள்ளப் படுகிறோம் என்பதை மட்டும் இங்கு கவனிப்போம்.

பீரியட் திரைப்படம் என்பது காலத்தோடு பின்னோக்கி சுழன்று பிற்கால மனிதர்களை திரையில் விளையாடவிடுவது. அம்மாதிரியான திரைப்படங்களில் இசையும் சேர்ந்து பின்னோக்கி சுழல வேண்டும். இத்திரைப்படத்தின் இசை சிறந்த இசையே எனினும் அது பல இடங்களில் முன்னோக்கி சுழன்று விட்டது. படம் ஆரம்பித்த சில நிமிடங்களில், கள்வர்கள் கூட்டமாக ஆடும் அந்த காட்சியில் பின்னனியில் ஒலிக்கும் இசை கார்ஸ் இன்ஸ்ட்ருமெண்டலின் (Corrs instrumental) இன்னொரு வகை.

பீரியட் படங்களை இரு வகையில் எடுத்திட முடியும். ஏதோ ஓர் காலத்தை தேர்ந்தெடுத்து அக்கால விடயங்களை அடிப்படையாக கொண்டு திரைக்கதை அமைப்பது ஒரு வகை. உதாரணம், வாகை சூடவா.

இன்னொரு வகை,ஒரு ஜனரஞ்சகமான கதையை எடுத்துக் கொண்டு அதை ஏதோ ஓர் காலத்தில் கொண்டு பொருத்துவது, உதாரணம் சுப்ரமணியபுரம்.

அரவான் திரைப்படத்தின் கதை கள்வர்களின் வரலாறு எனக் கூறப்பட்டாலும்.அவர்களின் வரலாறு ஆழமாக காட்டப்படவில்லை.வசனங்களை பேசும் விதம் ஓர் சமகால படத்தைப் போலவே தொனிக்கிறது. ஒரு சமகால மதுரை ஸ்கிரிப்டை பீரியட் படமாக செய்துவிட்டனர் என்றே சொல்லலாம்.

கதை பயணிக்கும் காலம் கி.பி 18ஆம் நூற்றாண்டு என்று மட்டும் சொல்லப்படுகிறது. இது இயக்குனரின் புத்திசாலிதனத்தையே காட்டுகிறது. காரணம், குறிப்பிட்ட வருடத்தைக் கொண்டு கதை எழுதும்போது, நிறைய மெனக்கெட வேண்டியிருக்கும். காட்சிகள் சரியாக அமையாத பட்சத்தில், வரலாற்றில் பிழையும் வரலாற்றுப் பிழையும் நிகழ்ந்திடும். வரலாற்றைக் குறிபிடாததால் ஏதோ ஒரு காலத்தில் இம்மாதிரியான கூட்டம் வாழ்ந்திருக்கலாம் என்று எடுத்துக் கொள்ளலாமெனினும் காட்சிகளை மிகவும் மேலோட்டமாக காட்டியதை தவிர்த்து சற்றே ஆழமாக காட்டியிருக்கலாம்.

மற்றபடி காட்சியமைப்பில் பீரியட் திரைப்படத்திற்கான நியாயம் செய்திருக்கின்றனர்.பீரியட் திரைப்படமென்பதற்கிணங்க அனைத்து காட்சிகளும் அருமையாக அமைந்திருக்கின்றன. ஒட்டுமொத்த படக் குழுவும் கடினமாக உழைத்திருக்கிறது என்பது தெளிவு. அதனால் அவர்களை பாராட்டிவிடுவோம்.

சில இடங்களில் கதாநாயகியின் உடையமைப்பு நவீனமாக தோன்றினாலும், அவர்களின் நடிப்பு அருமையாக அமைந்திருப்பதால் சிறு சிறு குறைகளை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இங்கு படம் பெரிதளவில் சொதப்புவது திரைக்கதையிலேயே. மூலக்கதையெனும் முடிச்சு திரைக்கதையில் ஒழுங்காக அவிழ்க்கப் படவில்லை.

படம் முழுக்க நிரம்பிக் கிடக்கின்றன கிளைக் கதைகள், காவல் கோட்டம் நாவலைப் போல.நாவலின் முக்கிய பலம் கிளைக் கதைகள்,படத்தின் முக்கிய பலகீனம் கிளைக் கதைகள்.ஒரு நாவலை எப்படி வேண்டுமானாலும் எழுதலாம். அது படைப்பாளிகளுக்கும் படிப்பாளிகளுக்கும் மட்டும் சொந்தமானது. ஆனால் சினிமா சற்றே வித்தியாசமானது, பல தரப்பு மக்களும் பார்ப்பது. ஒரு நாவலில் பத்து பக்கங்கள் எழுதிவிட்டு திடிரென்று கதையை 200 வருடங்களுக்கு பின் எடுத்து செல்ல இயலும். ஆனால் சினிமாவில் அது சாத்தியமன்று.

எவ்வளவு பெரிய திரைக் கதையாசிரியராக இருந்தாலும் திரைக்கதைக்கென வரையறுக்கப்பட்டசில அடிப்படை விதிகளை பின்பற்றியே தீர வேண்டும். அதில் மிகவும் அடிப்படையாக கருதப் படுவது “Inciting incident”. இந்தப் படத்தில்“Inciting incident” நிறைய வருவதே படத்தின் பலகீனம். “Inciting incident"எனப்படுவது ஒரு கதையின்கருவை தூண்டிவிடுவது. காதல் கதை என வைத்துக் கொண்டால், கதாநாயகன் கதாநாயகியை முதன் முதலில் பார்ப்பது, “Inciting incident”. அங்கிருந்து கதை தன் நிஜப் பாதையில் பயணிக்க வேண்டும். இத்திரைக் கதையில் மிக பிரம்மாண்டமாக திட்டம் போட்டு கள்வர்கள் கொள்ளையடிக்கும் காட்சியில் படம் தொடங்குகிறது. கொத்தாக திரியும் கள்வர்கள், தங்கள் ஊர் பேரை சொல்லி வேறொருவன் திருடிகிறான் என்று தெரிந்ததும் கொதிக்கிறார்கள். அவன் யார் என்று கண்டுபிடித்து தருவதாக அவர்கள் பாளையக்காரர்களிடம் வாக்களிக்கும் போது கதை தூண்டப்படுகிறது. இங்கு ஒரு Racy Entertainer தொடங்கிவிட்டது என்றெண்ணும் போது, அடுத்த கட்சியிலேயே கள்வன் கண்டுபிடிக்கப் பட்டு எதிர்பார்பு சோடை போய்விடுகிறது.

பின்னொரு காட்சியில் களவாணி கூட்டத்திடம் ஒரு பெரியவர் வந்து, “முடிஞ்சா ஆறு தலைமுறையா யாரும் களவாட முடியாத அந்த கோட்டையில களவாடிகாட்டுங்க” என்று சவால் விடுகிறார். ஏதோ ஒரு மிகப் பெரிய ஆச்சர்யம் காத்திருக்கிறது என்றெண்ணும் போது,அந்த காட்சியும் சப்பையாக முடிந்துவிடுகிறது.

இவ்வாறு ஒவ்வொரு காட்சியிலும் எதிர்பார்பைக் கூட்டி அடுத்து வரும் காட்சிகளில் அதை தக்க வைத்துக் கொள்ள இயலாமல், திரைக்கதை திணறுகிறது. இப்பாணி இறுதி

வரை தொடர்வதால், பிரம்மாண்ட திரைக்கதைக்கு இருக்க வேண்டிய ‘கெத்’ மடிந்துவிடுகிறது.

படத்தின் டைட்டிலில் கூடுதல் கதை (Additional Story) வசந்தபாலன் என்று போடுவதை காணும் போதே நெருடல் ஏற்படுகின்றது.

கதை,வசனம்- சு.வெங்கடேசன்

கூடுதல் கதை, திரைக்கதை, இயக்கம்-வசந்தபாலன்

கூடுதல் கதை என்பது வழக்கத்திற்க்கு மாறான ஒரு சொல். ஒரு கதையை நாவலிலிருந்தோ, வேறு யாரிடம் இருந்தோ பெற்றபின். திரைக்காக சில கதைகளை மூலக் கதையோடு பிரத்தியேகமாக இணைக்கும் போது ‘Screen Story’ என்பார்கள். அதனை திரைக்கான கதையென்று குறிப்பிடலாமேயொழிய ‘கூடுதல் கதை’என்று குறிப்பிட இயலாது.

தமிழ் சினிமாவில் கிரெடிட் சிஸ்டம் (Credit System) ஒழுங்காக பின்பற்ற படுவதில்லையென்பதற்க்கு இதுவே சான்று. காவல் கோட்டம் நாவலே திரைக்கதை போன்றுதான் எழுதப்பட்டிருக்கும். ஆனால் இங்கு தனியாக திரைக்கதை எழுதப்பட்டிருக்கும் பட்சத்தில், மூலக்கதை-சு. வெங்கடேசன். திரைக்கான கதை, திரைக்கதை- வசந்தபாலன் என்று குறிப்பிட்டுருக்க வேண்டும். அதைவிடுத்து ‘கூடுதல் கதை’ என குறிப்பிட்டது ஒரு எழுத்தாளனை அவமதிக்கும் செயல்.

மிகப்பெரிய திரைக்கதையாசிரியரான திரு.சுஜாதா அவர்களின் திறமையை உறிந்துக்கொண்டு வெறும் ‘வசனகர்த்தா’ என்றழைத்த தமிழ் சினிமா, சு.வெங்கடேசனுக்கு கிரெடிட் வழங்காததை எண்ணி ஆச்சர்யப்படுவதற்கில்லை.

இது ஒரு புறமிருக்க, இன்னொரு புறம் எதிர்பார்புகளை தக்க வைத்துக் கொள்ள இயலாமல் திணறும் திரைக்கதை இரண்டாவது பகுதியில் ஒரு சராசரி தமிழ் அழுகாச்சிப் படமாக உருமாறி எப்போது முடியுமென என்னும் அளவுக்கு நீண்டுக்கொண்டே போகிறது.

படத்தின் பலக்காட்சிகளில் மெல் கிப்சனின் (Mel Gibson) தாக்கத்தை தவிர்திருக்கலாம். அபகாலிப்ட்டோவின் (Apacalypto) மறுபதிவோ என என்னும் அளவுக்கு பல இடங்களில் அரவான் கதாபாத்திரம் அபகாலிப்ட்டோவின் ஜாகுவார் பாவ் (Jaguar paw) கதாபாத்திரதை நினைவு படுத்துகிறது. சில இடங்களில், குறிப்பாக படத்தின் இறுதி காட்சி ‘Brave Heart’ வில்லியம் வாலாசை (William wallace) ஞாபகப் படுத்துகிறது. அரவானிடம் குதிரையில்லை என்பதே பெரிய வித்தியாசம்.

கோட்டைக் களவின் இறுதிக்காட்சியை பார்க்கும் போது, புதுபேட்டை படத்தில் கொக்கி குமாரை அவனின் நண்பர்கள் வில்லனிடமிருந்து மீட்டுக் கொண்டுவரும் காட்சி நினைவில் எழுவதை தவிர்க்க முடியவில்லை.

## போதி தர்மர் முதல் ஜேம்ஸ்பாண்ட் வரை

படத்தில் தேவையற்ற ஸஸ்பென்ஸ் நிறைய வைக்கப்பட்டிருக்கின்றன. திரைக்கதையில் மூன்று விதமான ஸஸ்பென்ஸ் வைக்க முடியும்

1.திரையினுலுள்ள கதாபாத்திரங்களுக்குள் வைக்கப்படும் ஸஸ்பென்ஸ்

2.திரைக்கு வெளியிலிருக்கும் பார்வையாளர்களுக்கு வைக்கப்படும் ஸஸ்பென்ஸ்

3.இருவருக்கும் வைக்கப்படும் ஸஸ்பென்ஸ்

எந்த வகை ஸஸ்பென்ஸ் வைத்தாலும் பார்வையாளர்களுக்கு ஆர்வம் ஏற்பட வேண்டும். இங்கு அது ஏற்பட மறுக்கிறது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

இப்போதெல்லாம் low cost compositing, கிராபிக்ஸ் போன்றவை மிகவும் சாதாரணமாகிப் போய்விட்டது. அபப்டி இருந்தும் ஏன் தமிழ் சினிமா இன்னும் கேவலமான கிராபிக்ஸ் காட்சிகளை வைத்துக் கொண்டிருக்கிறது என்று இன்னும் விளங்கவில்லை. நல்ல கிராபிக்ஸ் அமைக்க முடியாத பட்சத்தில் கிராபிக்ஸ் காட்சிகளை தவிர்பதே புத்திசாலிதனம். அரவான் திரை படத்தில் கோட்டை களவின் போது உபயோகப் படுத்தப் பட்டுள்ள கிராபிக்ஸ் காண சகிக்க வில்லை. ஆயிரத்தில் ஒருவன் படம் கிராஃபிக்ஸில் சறுக்கியதை கண்டும் இன்னும் தமிழ் சினிமா பாடம் கற்கவில்லை.

அரவான் என்ற மகாபாரதக் கதாபாத்திரத்தால் கவரப்பட்டு,பின் அந்த கதாபாத்திரம் போலவே திரைப்படத்தின் நாயகன் பாத்திரமும் அமைய வேண்டும் என்ற கட்டாயத்தில் திரைக்கதை எழுதியுள்ளனர் என்பது தெளிவாக தெரிகிறது. அதனால்தான் இப்படி ஒரு கிளைமாக்ஸ் வைக்கப் பட்டிருக்கிறது…

இறுதியில் ‘மரண தண்டனையை ஒழிப்போம்’ என்று ஒரு கருத்துசொல்லப்படுகிறது. இது வந்த வரை லாபம் என்ற நோக்கில் சொல்லப் பட்ட கருத்தே ஒழிய உன்னத நோக்கில் சொல்லப் பட்ட கருத்தன்று. ஏதோ ஒன்றை காட்டிவிட்டு இறுதியில் ஏதோ ஒரு கருத்தினை சொல்வதை மேடை நாடகத்தில் வேண்டுமேனில் ஏற்றுக் கொள்ளலாமேயொழிய திரைப்படத்தில் ஏற்றுக் கொள்ளயியலாது.

மேலும் பிரிட்டிஷ் காலத்தில் நரபலி தடை செய்யப் பட்டது என படத்தில் குறிப்பிட்டுள்ளனர். அதே பிரிட்டிஷ் காலத்தில்தான் யானையை வைத்து மனிதன் கழுத்தை மிதித்து கொள்ளும் வழக்கம் பின்பற்றப் பட்டது என்பதை நினைவில் கொள்வோம்.

ஒரு காலத்தில் தமிழ் சினிமாவில் வந்துக் கொண்டிருந்த பெரும்பாலான படங்கள் பீரியட் படங்களே. காலப் போக்கில் அவ்வாறான படங்கள் மறைந்து விட்டது. பீரியட் படங்களுக்கு நிறைய உழைக்க வேண்டியிருக்கும். போட்ட காசுக்கு உத்திரவாதமில்லை. அனைத்தையும் கடந்து, தைரியமாக இப்படத்தை எடுத்த ‘அரவான்’ குழுவிர்க்கு பாராட்டுக்கள். பெரும் உழைப்பிருந்தும் படம் எந்தவொரு தாக்கத்தையும் ஏற்ப்படுத்தவில்லை.

இதை ஒரு நல்ல படம் என்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்வோம். ‘தலைசிறந்த படம்’ என்னும் வரிசையில் இப்படத்திற்க்கு இடமளிக்கயியலாது.

அரவிந்த் சச்சிதானந்தம்

100 வருடங்களுக்கு பின் தமிழ் சினிமாவின் தலைசிறந்த படங்களை வரிசைப்படுத்த முயன்றால், அதில் உதிரிப்பூக்கள், வீடு, ஹேராம், விருமாண்டி, பருத்திவீரன், வாகைசூடவா, ஆரண்ய காண்டம் போன்ற படங்கள் நிச்சயம் இடம்பெறும்.அதனோடு சேர்த்து ‘அரவான்’ படத்தையும் வைத்திடயியலாது. தலைசிறந்த படங்களை அடுக்கும் மேடை மிகவும் குறிகியது,. அங்கே நிறைய படங்களை திணித்திட இயலாது.

தமிழ் சினிமாவை உன்னிப்பாக கவனிப்போமேயானால் பெரும்பாலான இயக்குனர்கள் தங்களின் மூன்றாவது-நாலாவது படத்தில் தன்னை தானே கடவுள் என்று கருதிக்கொண்டு, தான் படைப்பதே வேதம் என்ற எண்ணத்தோடு சறுக்கியது விளங்கும். அந்த எண்ணங்களை அடக்கியாளும் இயக்குனரே பலவருடம் ஆட்சிப் புரிகிறான்.

இங்கு இன்னும் நல்லபடம் எது, மாற்று சினிமா எது,  கலைப்படைப்பு எது, என்று வகைப்படுத்த இயலா குழப்பம் நிலவுகிறது.. மாயை நிறைந்த இச்சூழ்நிலையில் நல்லக்கதைக்களமிருந்தும், திறமைசாலிகள் பலரிருந்தும், திரைக்கதையில் சோடைப் போன அரவான் திரைப்படத்தை வெறும் சராசரி படமாக கருதமுடியுமேயன்றி தலைசிறந்த படமாக கருதயியலாது.

இல்லை, இது தலை சிறந்த படம்தான் என கூக்குரலிடுபவர்கள் கூக்குரலிட்டுக்கொள்ளட்டும்.

IMDB தமிழ் பட தர வரிசையில், தமிழ் ரசிகர்களின் உபயத்தால் ‘சந்தோஷ் சுப்ரமணியம்’ போன்ற படங்கள் முதல் பத்து இடத்திற்க்குள் இருக்கிறது. அதைப் பார்க்கும் உலக-உன்னத சினிமா ரசிகன் எவனும் தன்னையறியாமலேயே சிரித்துவிடுவான்.

'அரவான்' மிக மிக அருமையான-தலைசிறந்த படமென்று சொல்லுபவர்கள் சொல்லிக் கொள்ளட்டும். அதனை கண்டு, உலக சினிமாவின் தீவிர ரசிகர்கள் எங்கோவொரு மூலையில் சிரித்துக் கொண்டிருப்பார்கள்......

## மயக்கம் என்ன

தமிழ் சினிமாவில் தனிமனித உணர்வுகளை மையப்படுத்தி எடுக்கப்பட்ட படங்கள் மிகக் குறைவு. ஒரு மனிதனின் வாழ்கையை நேர்கோட்டு சித்திரமாக காட்ட யாரும் அதிகம் முயற்சித்ததில்லை. தமிழ் சினிமாவுக்கென எழுதப்பட்ட இலக்கணம் அவ்வாறான படங்களை ஆதரித்ததில்லை. இங்கு காதலை, காதலியை துரத்திப் பிடிக்கும் மனிதர்களைப் பற்றிய படங்களே அதிகம். தன் லட்சியத்தை துரத்திப் பிடிக்கும் மனிதர்களைப் பற்றி யாரும் படப் பிடிக்க விரும்பியதில்லை.

ஒவ்வொருவரும் வாழ்கையில் ஏதோ ஓர் லட்சியத்தை அடைய போராடிக் கொண்டிருக்கிறோம், அவ்வாறான போராட்ட களங்களை படம் பிடிக்க தமிழ் சினிமா ஏதோ ஒரு வகையில் அஞ்சிக்கொண்டிருக்கிறது. "ஆறில் இருந்து அறுபது வரை" படத்திற்கு பின் எந்த ஓர் படமும் தனி மனித உணர்வினை பேசிடவில்லை. இங்கு குறிப்பிடப்படுவது மெல்லிய உணர்வுகளை. போலீஸ் ஆவதை லட்சியாமாக கொண்டு ஆக்ரோசமாக பயணிக்கும் கதாநாயகனைப் பற்றிய படங்கள் நிறைய வந்துள்ளது. அந்த படங்களில் மசாலாத்தன்மையே அதிகம் இருந்ததேயன்றி உணர்வுகளின் காட்சியமைப்பு மிகக் குறைவு. அப்படி மசாலா காட்சிகளை அதிகம் தவிர்த்து, எதார்த்தத்தோடு பயணிக்கும் படமே ' மயக்கம் என்ன'வனவிலங்கு புகைப்படக்காராரக வர விரும்பும் ஓர் சராசரி இளைஞன் தன் வாழ்வில் சந்திக்கும் போராட்டங்களே இப்படம். பல போராட்டங்களுக்கு பின் அவன் இறுதியில் தன் லட்சியத்தை அடைகிறான்.

ஆங்கிலத்தில் வந்த Pursuit of happiness, Cinderalla man, Beautiful Mind போன்று இதுவும் உங்களை எந்த வகையிலும் ஏமாற்றாத ஓர் அருமையான படம்.

'வறுமையின் நிறம் சிவப்பு' படத்திலும் கதாநாயகன் இலட்சியத்திற்காக போராடுவார். ஆனால் அதில் வரும் கதாநாயகன் சித்தாந்தம் பேசும் ஓர் மனிதனாக காட்டபட்டிருப்பார். ஆனால் மயக்கம் என்ன படத்தின் கதாநாயகன் ஓர் சாதரணமானவன். உங்களையும் என்னையும் போன்று. அதுவே இந்த படத்தின் மிகப்பெரிய பலம். ஒரு காட்சில் கதாநாயகன் கண்ணீர் வடிப்பார் , "எனக்கு வேற எதுவுமே தெரியாது யாமினி".இங்குதான் கதாபத்திரம் தன் இயலாமையை ஒத்துக்கொள்கிறது. இதுவே தனி மனித யதார்த்தம் ...

சில படங்கள் மட்டுமே , கதையை பல முறை கேட்டாலும். திரைக்கதையையே படித்தாலும், பார்க்கும் போது சலிப்பு தட்டாது. மேற்கூறிய அணைத்து ஆங்கில படங்களும் அந்த வகையை சார்ந்தவையே.அதற்க்கு காரணம் அந்த படங்களில் நடித்த நடிகர்களின் திறமை.

மயக்கம் என்ன படத்திலும் நடிகர்கள் பிளந்து கட்டுகிறார்கள். குறிப்பாக தனுஷ், ரிச்சா, சுந்தர்.. இது அருமையான படம் என சிலரும், மிகவும் மெதுவான திரைக்கதை என சிலரும், இதற்குமுன் தன் படத்தில் வைத்த காட்சிகளையே செல்வா மீண்டும் வைத்துள்ளார் என சிலரும் குறிப்பிடுகின்றனர். ஆனால் இவை அனைத்தையும் தவிர்த்து

அரவிந்த் சச்சிதானந்தம்

மயக்கம் என்ன திரைப்படம் நிறைய ஆக்கப் பூர்வமான விமர்சனங்களுக்கு வழிவிட்டு செல்கிறது .

தமிழ் திரைப்படங்களில் ஒரு பெண்ணின் கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த படங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். மொழி, தென்மேற்கு பருவகாற்று போன்ற படங்கள் பெண்ணின் கதாபாத்திரத்தை முன்னிறுத்தியே எடுக்கப்பட்டன . ஆனால் ஓர் கதாநாயகனின் வெற்றிக்கு நாயகிதான் காரணம் என குறிப்பிடும் படங்கள் தப்பி தவறியும் தமிழில் வந்ததில்லை. நம் சமுதாயம் ஆண் ஆதிக்கம் நிறைந்தது. நாம் ஒத்துக் கொள்ள மறுத்தாலும் அதுவே உண்மை.

இதற்க்கு முன் பெண்களை முன்னிலைப் படுத்தி வந்த படங்கள் சற்றே வேறு வகையை சார்ந்தவை . முதல் பாதியில் நிறைய ஆட்டம் போடும் கதாநாயகன் இரண்டாம் பாதியில் திடிரென நோயில் படுத்திடுவார். கதாநாயகி மஞ்சள் அல்லது சிகப்பு புடவை உடுத்தி 'அம்மா அம்மா ' என கதறிடுவார். ஏதோ ஓர் பிரபல நடிகை அம்மனாக வந்து கதாநாயகனை காத்திடுவார். இது போன்ற படங்களை பற்றி இங்கு பேசவில்லை. அது பெண்களை மூடர்களாக காட்டி பணம் சம்பாதித்த ஆணாதிக்க படங்கள்.மயக்கம் என்ன படத்தில் காட்டப்பட்டிருக்கும் மனைவி படத்திலேயே குறிப்பிட்டது போன்று ஓர் "இரும்பு பெண்" . Cinderalla Man படத்தில் வரும் மனைவியை போல. கணவனின் எல்லா தோல்விகளிலும் உடனிருந்து அவனை முன்னிற்கு கொண்டு வரும் ஓர் அருமையான மனைவி....

”மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்”

-கண்ணதாசன்…

படத்தில் இன்னொரு முக்கிய விஷயம் இயக்குனர் தன் நடிகர்களிடம் வைத்திருக்கும் நம்பிக்கை.காரணம் நிறைய அழுவை காட்சியில் தைரியமா க்ளோஸ் அப் வச்சிருக்கார். "உதிரிப்பூக்கள்" படத்திற்கு பிறகு அனைத்து கதாப்பாத்திரங்கள் மீதும் நம்பிக்கை வைத்துகாட்சிகள் அமைக்கப்பெற்ற படம் இதுவாதான் இருக்கமுடியும் செல்வா இந்த படத்துல எங்கேயும் சறுக்கல.. ஆயிரத்தில் ஒருவன் இரண்டாம் பாதியில இருந்த அந்த தலைகனம் இதுல இல்ல. ரொம்ப எளிமையா, ஆனா அதே சமையம் அருமையாகவே இந்த படத்தை கொடுத்திருக்கிறார்.

இந்த படம் A beautiful mind படத்தின் தழுவல்னு சொல்றதெல்லாம் பொய். A beautiful mind படத்தில் இறுதிகாட்சியில் விருது வாங்கிட்டுஹீரோ தன் மனைவிக்கு நன்றி சொல்லுவார். அதே மாதிரி ஒரு காட்சி இப்படத்தில் இருப்பதனால் இந்த படத்த தழுவல் படமென்றேல்லாம் சொல்ல முடியாது.

தமிழ் சினிமாவ பொறுத்த வரையில் கௌதம் மேனனும், செல்வராகவனும் திரைக்கதை எழுதுற வேகம் ரொம்ப பிரமிக்கவைக்கிறது. திடீர் திடிர்னு படம் எடுத்து மிரட்றாங்க (எங்க இருந்து கதைய உருவுறாங்க என்பது தற்போது தேவைற்ற விடயம் ) செல்வா படங்களில் வழக்கமா கதாநாயகிய ஒரு போகப் பொருளாதான்சித்தரித்திருப்பார்.(அவ்வாறெனினும் அதில் விரசம் இருக்காது.)ஆனால்

இந்த படத்தில் வழக்கத்திற்கு மாறாக கதாநாயகிய ரொம்ப அருமையா சித்தரித்திருக்கார். தனுஷ் தேர்ந்த நடிகர் என மீண்டும் நிருபித்துள்ளார். புதுப்பேட்டை படத்திலேயே அப்பாவி இளைஞனாகவும், மிக பெரிய தாதாவாகவும் . முதிர்ந்த நடிப்பை வெளிப்படுத்தி இருப்பார். அதே போன்று இப்படத்திலும் ஓர் மெத்தன புகைப்பட கலைஞனாக இருந்து பின் ஓர் தலை சிறந்த கலைஞாக மாறும் அந்த மாறுதல்,நடிப்பின் உச்சம். கதாநாயகியும் தன் பங்கிற்கு அருமையான நடிப்பை வெளிபடுத்தியுள்ளார். வெறும் முக பாவத்திலேயே பல இடங்களில் மனதை கொள்ளைகொள்கிறார்.

படம் புகைப்படக் கலைஞன் சம்பத்தப்பட்ட படம் என்பதால், ஒளிப்பதிவாளரும் வித்தை காட்டியுள்ளார். அனைவரும் தங்கள் வேலையை செவ்வன செய்துள்ளனர்...இசை நன்றாக இருந்தது என்பதோடு நிறுத்திக்கொள்வோம். பல இடங்களில் ஜி.வி.பிரகாஷின் இசை அவரது பழைய படங்களை ஞாபகபடுத்துகிறது. (அந்த பழைய படங்களின் இசையும் பிரெஞ்சு இசையை ஞாபகப்படுத்தும். அது வேறு விடயம். ) இயக்குனர் தன் பழைய இசையமைப்பாளரோடு

கூட்டணி வைத்திருந்தால் நிச்சயம் பத்து தீம் மியூசிக்யாவது கிடைத்திருக்கும்.ஆனால் இப்படத்தில் ஒரே தீம் மியூசிக் தான் சுற்றி சுற்றி வந்துக் கொண்டிருக்கிறது. அதுவும் எரிக் சேரா வின் (Eric Serra) இசையை நினைவு படுத்துகிறது தமிழ் சினிமாவில் இப்போதெல்லாம் கொரிய ஜப்பானிய திரைப்படங்களின் தாக்கம் அதிகாமாக தெரிகிறது. சேரன்,மிஸ்கின் தொடங்கி இப்போது இந்த படத்திலும்அந்த தாக்கம் தென்படுகிறது.

முன்பெல்லாம் கதை, திரைகதைகளே தழுவப்படும். இப்போது படத்தை எடுக்கும் முறை (Way of Making) தழுவப்படுகிறது.ஒரு காட்சியை முடிக்கும் போது கதாபாத்திரங்களின் உணர்வுகளை,முக பாவங்களை சில நொடிகள் பதிவு செய்து பின் அடுத்த காட்சிக்கு நகரும் முறையை நீங்கள் கொரிய ஜப்பானிய திரைப்படங்களில்காணலாம். அது போன்ற காட்சிகள் இப்போது தமிழிலும்தொற்றிக்கொண்டுவிட்டன. இந்த படத்திலும் அதை நீங்கள் உணரலாம்.

அருமையான வசனங்களை இந்த படத்தில் செல்வா எழுதியுள்ளார்.இதுவரை ஆங்கிலத்தில் லட்சியவதிகளைப் பற்றி எடுக்கப்பட்ட அனைத்து படங்களிலும் வசனங்கள் முக்கிய பங்கு வகித்தன.Rocky, Pursuit of happiness போன்ற படங்களில் வருவது போலஇந்த படத்திலும் ஊக்கம் அளிக்ககூடிய வசனங்கள் சில உண்டு.

"மனசுக்கு புடுச்ச வேலைய செய்யனுங்க. இல்லனா செத்துரனும்" என தனுஷ் பேசும் வசனம் பாலோ கோயேலோ (Paulo coelho) நாவல் படிச்ச ஒரு உணர்வ ஏற்படுத்துது.மொத்ததுல படம் நிச்சயம் பார்ப்பவர்களை மயக்கிடும் ... சில பேர் படம் ரொம்ப ஸ்லோவா நகர்றதா குறை சொல்றாங்க... ஆனா நம்ம வாழ்க்கையே ஸ்லொவ் தாங்க.. கில்லி மாதிரி பாஸ்டா படம் வேனும்ன, அடுத்த வாரம் ஒஸ்தி ரிலீஸ் ஆகுது..அத போய் பாருங்க...

அரவிந்த் சச்சிதானந்தம்

# 7 ஆம்அறிவு

முன்குறிப்பு

இந்த படத்திற்கு விமர்சனம் எழுத வேண்டும் என்ற அவசியம் எனக்கில்லை..ஆனால் ஓர் தவறான முன் உதாரணமாக இத்திரைப்படம் அமைந்து விடக்கூடிய வாய்புகள் அதிகமுள்ளதால் இதை எழுதுகிறேன்.. கல்லாவை நிரப்ப கோயபெல்ஸ் (Goebbels) வேலையை நன்றாகவே செய்துள்ளனர்.. மரியான அசுயேல (Mariana Azuela) எழுதிய ஓர் நாவலில் (Underdogs), எதுக்கு போராடுகிறோம் என்று தெரியாமலேயே ஓர் கூட்டம் போராடும்.(அண்ணா ஹசாரே கூட்டம் போல்!) அதுபோல் இந்த படம் பார்த்த சிலர் திடிரென தமிழ் உணர்வு பெற்று ஆனந்த கூத்தாடுகிறார்கள்...தமிழ் உணர்வு என்பது இலக்கியத்தில் இருக்கவேண்டும்...சக தமிழனின் மீது கொண்ட அக்கரையில் இருக்க வேண்டும்...சங்க தமிழை பேணி காப்பதில் இருக்கவேண்டும்..சமகாலத்தில் தமிழுக்கு செய்யும் தொண்டில் இருக்க வேண்டும்..அதை விடுத்து பழைய பெருமைகளை பேசிக்கொண்டிருப்பதில் எந்த பயனுமில்லை...

7 ஆம்அறிவு

மனிதனின் ஆறாம் அறிவே அதிகம் பயன்படுத்தப்படாத ஓர் உலகத்தில், தன் ஏழாம் அறிவை உபயோகப் படுத்தி ஓர் கலை காவியத்தை படைத்துள்ள இயக்குனருக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். இப்படி சொல்லலைனா என்ன தமிழனே இல்லன்னு சொல்லிருவாங்க. ஏனா இந்த படத்துல தமிழனுக்கு ஆதரவா நாலு வசனம் வருது. அதுக்காக ஊர்ல இருக்குற பச்சை தமிழனுங்க பல பேரு என்னவோ இந்த படத்துக்கு அப்புறம்தான் தான் தமிழன்னு உணர்ந்த மாதிரி துடிக்கிரானுங்க. நாமும் துடிப்போம். உணர்வு இருக்கிற மாதிரியாவது நடிப்போம்.

தூள் படத்தில் வில்லன் ஒரு அறிக்கை விடுவார்,:" உடம்புல தமிழ் ரத்தம் ஓடுற ஒவ்வருத்தனும் இந்த உண்ணாவிரதத்துக்கு வரணும் ".

உடனே எல்லாம் உண்ணாவிரதத்துக்குஓடுவானுங்க. அது மாதிரி தான் இந்த படமும்.

தமிழ் மீது பற்றுள்ள, தமிழ் இலக்கியத்தின் மீது தீராத ஆர்வமுள்ள பலரும், பல வருடமா சொல்லிகிட்டிருக்குற ஒரு விடயத்தின் சிறு பகுதியைதான் திரு.முருகதாஸ் இந்தபடத்தில் சொல்ல முயற்சித்திருக்கிறார். ஆனா ரொம்ப உணர்ச்சிவச பட்டதனாலோ என்னவோஅத அவர் ஒழுங்கா சொல்லல.

தமிழனின் பெருமைய பத்தி நிறைய சொல்லலாம்.அதை பத்தி எந்த ஐயப்பாடுமில்லை.மிதக்கும் தன்மையை (buoyancy) ஆர்கிமேடிசுக்கு (Archimedes) முன்பே சொன்னது தமிழன். அணுவை கூராக்கும் (divisibility of atom) தன்மையை கண்டவன் தமிழன்.ஆனா ஏழாம் அறிவ பொறுத்த வரையில் கருத்துக்கள் எந்த வகையில் சொல்லப்பட்டதுன்னு இன்னும் தெரியுல.

அறுபது வருடமா திராவிட கட்சிகள் தமிழ் என்ற ஆயுதத்த வைத்து தமிழன ஏமாத்துற மாதிரியே இந்த படத்துலயும் கல்லா கட்டுறதுக்காக தமிழன கேனையன் ஆக்கிடாங்களோ !

போதி தர்மர் முதல் ஜேம்ஸ்பாண்ட் வரை

முதல் இருபது நிமிடம்

முதல் இருபது நிமிடம் ஆவணப் படம் பாணியில் அமைந்துள்ளது.ஆவணப்படமென்றால் உண்மை இருக்கனும். ஆனா இதுல போதிதர்மன ரொம்ப நல்லவரா வல்லவரா காட்டனும் என்பதற்காக ரொம்ப சரடு திருசுட்டாங்க, ஏதோ ஏசுநாதர் 'கருணாமூர்த்தி' சீரியல் பார்த்தமாதிரி இருந்துச்சு. இவரு போவாராம், நோய குணப்படுதுவாரம், அப்பறம் சண்ட போடுவாராம், அப்பறம் விஷம் குடிச்சு செத்துருவாராம்,நான் தெரியாமதான் கேக்குறேன் அவரு என்ன அவ்வளவு பெரிய அப்பட்டக்கரா !

சினிமால சினிமாத்தனம் இருக்கலாம். ஆனால் அது ஒரு வரையறைக்கு உட்பட்டிருக்கனும், இங்க இயக்குனர் பர்மா பஜார் டி.வீ.டி நிறைய பார்த்து இருப்பாரு போல. போதிதர்மனுக்கு மருதநாயகம் கமல் மாதிரி ஒரு கெட்டப். "மொங்கோல்" என்கிற ஓர் ரஷ்ய படத்துல இருந்து உருவுன சண்டைகாட்சினு கதை நகர்கிறது.

ஆனா அந்த சினிமாத்தனமான புருடாக்கள் ஆவணப்படம் மாதிரி காட்டப்பட்டதனால் அதை ஆராய வேண்டிய கட்டாயத்திற்கு நாம் தள்ளப்படுகிறோம்.

போதிதர்மன் தமிழரா !

பல்லவர்கள் தமிழர்களா?, என்ற கேள்விக்கே இன்னும் தெளிவான விடை கண்டுபிடிக்கப்படல..பல்லவகுல தோற்றம் பற்றி நிறைய வாதங்கள் நிலவினாலும் பெரிதாக நம்பப்படுகிற, பலராலும் முன் வைக்கப்படுகிற வாதங்கள் மூன்று

சோழ மன்னன் கிள்ளிவளவனுக்கும், தமிழ் பேசும் நாக வம்சத்தை (இலங்கை ) சேர்ந்த பில்லி வலைஎன்ற இளவரசிக்கும் பிறந்த தொண்டை இளந்திரையன் மூலமாக உருவானதே பல்லவ குலம் என்பதுமுதல் கூற்று. கொஞ்சம் பகுத்துணர்ந்து பார்போமேயானால், பல்லவர்கள தமிழர்களஅடையாளப் படுத்தனும் என்ற ஒரே காரணத்திற்க்காக இந்த கூற்று சித்தரிக்கப்பட்டிருப்பதைஉணரலாம்.

அடுத்த கூற்று, பல்லவ குலம் த்ரோனாசாரியரின் பேரன் மூலமா தோன்றியது என்பது. இது தமிழனுக்கு எதிரா இருந்த ஏதோ ஒர் கூட்டம் கிளப்பிவிட்ட கதையா இருக்கலாம்.

அடுத்தது, பல்லவர்கள் கடல் கடந்து வந்தவர்கள், இந்திய துணை கண்டத்தையே சாராதவர்கள்…

ஆனால் இதுநாள் வரை தெளிவான ஆதாரம் எதுவும்கிட்டவில்லை.. (தமிழில் சமணர்கள் பௌத்தர்களால் இயற்றப்பட்ட பல அருமையான இலக்கியங்கள் சைவர்களால் அழிக்கப்பட்டன. அந்த இலக்கியங்களோடுசேர்ந்து பண்டைய தமிழ் சமுதாயத்தப்பற்றிய பல குறிப்புகளும் அழிஞ்சுபோச்சு.தமிழ் அழிந்ததற்கு அழிவதற்கு தமிழனே காரணம்.)

இந்நிலையில் போதிதர்மனை பற்றியும் நிறைய புருடாக்கள் படத்தில் விடப்பட்டிருக்கு.. இது வரை கண்டெடுக்கப்பட்ட வரலாற்றில், போதிதர்மன் என்ற

பல்லவ குல இளவரசன் தன் தந்தையின் மரணத்திற்கு பிறகு தன் குருநாதார் பிரஜ்னாதார அவர்களின் கட்டளைக்கு இணங்கி பௌத்தத்தை பரப்புவதற்காக தமிழகத்திலிருந்து வெளியேறினார் என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது .

பல இடங்களுக்கு பயணம் செய்து, சில இடங்களில் நற் பெயர் கொண்டு, பல இடங்களில் அவமானப்படுத்தப்பட்டு பின் ஒருநாள்தான் ஷாலின் கோவிலை (shaolin temple ) அடைந்தார்.

முற்காலத்தில் பௌத்தத்தில் உடலை வருத்தி கடும் தவம் புரியும் ஓர் முறை பின்பற்றப்பட்டது. போதிசத்துவரே (Gouthama Buddha) முதன்முதலில் அந்த முறையைதான் கடைப்பிடித்தார் .அப்படி ஓர் முறையை மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் போது அவர்களது உடல் அதற்கு ஒவ்வாததால் அவர்களின் உடலினை சரிவர கட்டமைக்கும்பொருட்டே அவர்களுக்கு தற்காப்பு கலையினை போதிதர்மன் பயிற்றுவிக்கக் தொடங்கினார்.

போதிதர்மன் திறமைசாலி என்பதில் எந்த ஐயப்பாடுமில்லை . அதற்காக அவரை ஓர் தெய்வப்பிறவியாக, ஆக்ஷன் ஹீரோவாக படத்தில் காட்டியிருப்பது, இயக்குனர் மிகவும் உணர்சிவசப்பட்டுள்ளார் என்பதையே காட்டுகிறது. இதை வெறும் சினிமா என்று ஒதுக்கமுடியாததர்க்கு காரணம், இறுதியில் "போதிதர்மன் ஓர் தமிழர். உங்களில் எத்தனைபேருக்கு அவரை தெரியம் ?" என்பன போன்ற சில கேள்விகளை உணர்ச்சி மிகுதியில் பார்வையாளர்களை நோக்கி இயக்குனர் முன்வைப்பதனால்.

(அட போங்க பாஸ். நீங்க ஓர் காமெடி பீஸ். பல தமிழனுக்கு ஜெயகாந்தன்யாரு நகுலன்யாருனே தெரியாது. யாப்பருங்காலகாரிகை என்றால் என்னான்னு தெரியாது....)

முதல் இருபது நிமிடம் உணர்ச்சிய கொஞ்சம் கட்டுபடுத்தி இருந்திருக்கலாம்...

இரண்டாம் பகுதி

படத்தை இரண்டு பகுதிகளா பிரிக்கலாம். முதல் பகுதி-போதி தர்மன் காட்சிகள். போதிதர்மன் இல்லாத பகுதி இரண்டாம் பகுதி.

இரண்டாம் பகுதின்னு குறிப்பிட காரணம், இருபத்தைந்தாவது நிமிடம் தொடங்கி படம் எங்க பயனிக்கிரதுன்னு தெரியாமலயே போவதனால்..

இந்த படமுழுக்க அப்படிதான் காட்சியமைக்கப்பட்டிருகிறது. சம்பந்தமற்ற தொடர்பற்ற காட்சிகள். அதற்காக இத ஓர் நான் சீக்யுன்சியல் (non-sequencial/ non linear narrative ) படம் என்று நினைத்துவிட வேண்டாம். திரைக்கதை ஆசிரியர் ரொம்ப திணறி இருக்கிறார்.

93 நாட்களுக்கு முன்பு என்று இரண்டாம் பகுதி ஆரமிக்கிறது. அது எதுக்குன்னு இன்னும் புரியல...

எந்த படமாக இருந்தாலும் காட்சிகள் சரமாரியாக நகரக் கூடாது. ஆனா இந்த படத்துல சம்பந்தமே இல்லாம காதல் காட்சிகள் ரொம்ப வேகமா நகர்கின்றன. எந்த

காட்சியும் மனசுல பதிய மாட்டேங்குது. ஏதோ படத்த இரண்டரை மணி நேரம் ஓட்டனும் என்பதற்காகவே காட்சி வைக்கப்பட்டதா தோணுது…

திரைக்கதை

உலகத்துல எல்லாத் திரைக்கதைக்கும் ஒர் பொதுவான வடிவம் இருக்கு. அதிகம் பயன்படுத்தப்படுவது மூன்று அங்க சட்டமைப்பு (Three act strcucture) என்பது.

அதாவது முதல், நடு, முடிவு

1.அறிமுகம் (Intro)

2.முரண்பாடு (Confrontation)

3.தீர்வு (Resolution)

இந்த எந்த வடிவமுமே கதைமாந்தர்களுக்கு பொருந்திவரல. இதில் ஆச்சர்யம், இதற்குமுன் மூன்று அருமையான திரைகதைகள எழுதிய இயக்குனர் இதுல எப்படி சறுக்கினார் என்பதுதான் (யானைக்கும் அடி சறுக்கும் !)

மேற்கூறிய வடிவம் பொருந்துற ஒரே கதாபாத்திரம் அந்த விஞ்ஞானி கதாபாத்திரம்தான். ஷோபா என்ற ஓர் விஞ்ஞானி ஓர் ஆராய்ச்சியில் ஈடுபடும் போது அந்நிய சக்திகளால் ஏற்படும் பிரச்சனைகளிலிருந்து எப்படி மீண்டு வராங்க என்பதே கதை ஓட்டம் (இதிலிருந்து தெளிவாகிற விஷயம், நிச்சயம் விஞ்ஞானி கதாபாத்திரம்தான் போதிதர்மனுக்குபின் முக்கிய கதாபாத்திரமா இருந்திருக்கணும்.அதாவது சூரியா நடிசிருக்கணும். ஏதோ கவர்ச்சி வேணும் என்பதர்க்ககவே அந்த கதாபத்திரத்த ஓர் பெண்ணை நடிக்கக் வச்சுடாங்க. (பெண் என்கிற காரணத்தால் அந்த கதாபாத்திரத்தின் ஆழத்தை குறைத்திருக்கலாம். தமிழ் சினிமா ஆண் ஆதிக்கம் நிறைந்தது !)

பாத்திரப்படைப்பு

மேற்கூறிய மாதிரி பாத்திரபடைப்பில் நிறைய சமரசம் செய்யப்பபடிருகிறது. அந்த சர்கஸ்காரன் கதாபாத்திரம் ரொம்ப ரொம்ப அலங்கோலமா வந்திருக்கு. அவன் நுனி நாக்கில் ஆங்கிலம் பேசுறத கூட மன்னித்துவிடலாம். ஆனால் ஆடி மாசம் சாமி வந்து ஆடுறது மாதிரி, இறுதிக் காட்சியில் போதிதர்மன் உடம்புல வந்தவுடன் கொடுக்குற ஓர் ரீயாக்சன் தான் கொஞ்சமில்ல ரொம்பவே ஓவர்…

முக்கிய கதாபத்திரம் அனைத்தும் அந்நியமாவே படுது. மனதில் நிற்க மறுக்கிறது. வில்லன் வாங்குன காசுக்கு சண்ட போட்டிருக்கிறார் (இவங்க கூட்டுற அலப்பறை அளவுக்கெல்லாம் அவர் ஒன்னும் பெருசா நடிக்கல)

கதாநாயகிதான் ரொம்ப பாவம். என்ன நடிக்கிரோம்னு தெரியாமலேயே நடிச்சிருக்காங்க.

வசனம்

படத்தின் முக்கிய பலம் சில வசனங்கள். தமிழனோட பெருமைய குறிக்கிற வசனங்களில் கவனம் செலுத்திய வசனகர்த்தா , மற்ற இடங்களில் கோட்டைவிட்டுட்டார் .. நிறைய இடத்துல ரொம்ப மொக்க வசனம்,

யானை மேலே உட்கார்ந்துக்கொண்டு கதாநாயகி சொல்லுவாங்க "அய்யோ குத்துது. "நாயகன் சொல்லுவார் "அதுக்காக டைல்சா போடமுடியும் "

அரவிந்த் சச்சிதானந்தம்

இப்படி மொக்க வசனங்கள  பேசி அவங்க ரெண்டு பேரும் சிரிப்பாங்க. சத்தியமா அவங்க ரெண்டு பேர் மட்டும்தான் சிரிப்பாங்க. படம் பார்க்குறவங்க அழுவாங்க. ஏனா உடனே தேவைற்ற ஓர் பாட்டு வரும். தமிழ்  படங்களில் தேவையில்லாம பாட்டு வைக்கிறதா கொஞ்ச நாள் தவிர்த்திருந்தாங்க. இப்போ மீண்டு ஆரமிச்சிடாங்கபா

திரு.சூரியாவை தவிர்த்து மற்ற எல்லாரும் பல இடங்களில் வசங்கள  பேசும் போது ஏதோ உணர்ச்சியே இல்லாத மாதிரிதான் பேசுறாங்க . உதாரணம் ,

"முடியும் இதெல்லாம் ஒருத்தராலதான் முடியும்...போதிதர்மன் " (ஏதோ போக்கிரி படத்துல விஜய் intro பார்த்த மாதிரி இருந்துச்சு . .அதவிட கேவலமா இருந்துச்சு)

"லேப் கீய எடுத்துகிட்டு  புது சிம் கார்ட் வாங்கிட்டு நாளைக்கு காலைல வந்திருவான் "இப்படி எல்லாரும் வசனத்தை மனபாட செய்யுள் மாதிரி ஒப்பிகிறாங்க..

இசை

படத்தோட முக்கிய பலம் இசை. ஏனென்றால் இந்த படத்தின் இசை உங்களுக்கு மலரும் நினைவுகள கொடுக்கும்,பழைய காலத்தை ஞாபகப்  படுத்தும். அதாவது மொத்த இசையும் எங்கேயோ கேட்டமாதிரி இருக்கும்! குறிப்பா போதிதர்மனின் அறிமுகப் பாடல் (Rise of damo) .. அதை கேட்டா  நீங்க குழந்தைப் பருவத்திற்கே போயிருவீங்க “Jhonny Jhonny yes papa…. Twinkle twinkle little star… “ (அத்தனையும் ஒரிஜினல் ட்யூன். ரூம் போட்டு யோசிப்பாங்களோ !)

படத்தின்பலம்

உண்மையாக படத்துல ஒழுங்கா நடிச்சிருக்குறது போதிதர்மன் சூரியா.. தன் கதாபாத்திரத்திற்கு  நியாயம் செய்திருக்கிறார். போதிதர்மானாக  அவர் கண்ணுல ஒரு தேஜஸ் தெரியுது. அவர் கண் அசைவுகள் அருமை..

நிச்சயம் சில நல்ல வசனங்கள் வைத்ததற்கு இயக்குனர பாராட்டியே ஆகணும்..இந்த படத்தோட மூலக்கதை என்னமோ நல்லாத்தான் இருக்கு . போதிதர்மன் திரும்பி வந்தா எப்படி இருக்கும் என்பதே அது..ஆனா  எடுத்த விதம்தான் சகிக்கல..

என்னதான் ஆனியன் தோசையாகவே இருந்தாலும் ஆனியன மட்டும் சாப்பிட முடியாது. இங்க ஆனியன் மட்டும் வெந்திருக்கு..தோசை சுத்தமா வேகல...அரைவேக்காடு முட்டைய சாப்பிடலாம் ..அரை வேக்காடு தோசைய சாப்பிட முடியுமா !

இயக்குனர் ரொம்ப பீல் பண்ணியிருக்கார்.. ஆனா 83 கோடி போட்டு பீல் பண்ணினது ரொம்ப ஓவர் ...

“அதுக்காக நீ ஏன் பீல் பண்ணுற ?" என்று நீங்கள் கேட்பது என் காதில் விழுது..

அவர் ஓர் கமர்சியல் படம் பண்ணிருந்தார் என்றால் நானும் கை தட்டிட்டு வந்திருப்பேன்...ஆனா ஏதோ இவருக்குதான் இன உணர்வு இருக்கிறது மாதிரி பீல் பண்ணி இன உணர்வ தூண்டுறதா நினைத்து கொண்டு இன உணர்வ சீண்டிவிட்டுட்டார் ..

KFC சிக்கன் சாப்பிட்டு , வெளிய வந்து கம்யுனிசம் பேசுற மாதிரி, இவரும் ஒரு மொக்க மசாலா படத்துல ஓவரா தமிழ் உணர்வ திணித்திருக்கிறார்..கல்லா கட்டுறதுக்கு செய்யப்படும் சந்தர்பவாத அரசியலே இது...

நாற்பது லட்சத்துல மாற்று சினிமா எடுக்கமுடியும்..Children of heaven, tri colors,மாதிரி படங்கள்  எடுக்க அதிக பட்சம் ஒரு கோடி தேவைப்படும்..மூணு கோடி இருந்தா கலை காவியமே படைக்க முடியும்..அத விடுத்து, காசு இருக்குனு ஒரே காரணுத்துக்காக சரடு திரிக்கிறத தான் தாங்கிக்க முடியல...

இயக்குனரோட இன உணர்வ கேள்வி கேக்குற உரிமை யாருக்குமில்லை...நிச்சயம் அவர் தமிழ் இனத்துமேல  பற்று  கொண்டதால்தான்  இந்த  கதைய ஆரமிச்சிருக்கார்..ஆனா இறுதியில் சீரளிச்சிட்டார்...

போதிதர்மான பத்தி இன்னும் நிறைய ஆராய்ச்சி பண்ணி இருக்கலாம்...ஒரு கமர்சியல் படத்தில் இத்தனை கோடிய வீணடித்ததற்கு பதிலாக போதிதர்மனை பற்றியோ அல்லது தமிழ் சமுதாயத்தை பற்றியோ ஓர் நல்ல ஆவணப் படம் எடுத்திருக்கலாம் (ஆவணப் படம் எடுப்பது கேவலம் என்பது போன்ற ஓர் சூழல் இங்கு நிலவுவது நம் சாபக்கேடு )

அதை சப்டைட்டில்ஸ் (Subtitles) போட்டு இணையத்திலும் பிரபல தொலைகாட்சிகளிலும் வெளியிட்டிருந்தால், தமிழனின் பெருமை உலகெங்கும் பரவி இருக்கும்.

திரு.முருகதாஸ் மாதிரி இந்திய அளவில் பிரபலமான இயக்குனர் அதை செய்யும் போது அந்த ஆவணப்படம் எளிதில் உலகெங்கும் பரவியிருக்கும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

வருங்காலத்திலாவது இதுபோல் அரை வேக்காடு படங்களுக்கு காசை வீணடிக்காமல் ,நல்ல முயற்சிகளுக்கு செலவழிப்பார்கள் என நம்புவோம்..நல்ல முயற்சிகளுக்கு தமிழனின் ஆதரவு என்றுமே இருக்கும்...

###

அரவிந்த் சச்சிதானந்தம்

**அரவிந்த் சச்சிதானந்தம்**

இவர் மெட்ராஸ் இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் பொறியியல் பட்டம் பெற்று, ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் பொறியாளராகப் பணியாற்றியவர். இன்று முழு நேரப் படைப்பாளியாக இயங்கிக் கொண்டிருக்கிறார். இவரது கதைகளும் கட்டுரைகளும், பல்வேறு இதழ்களிலும், தளங்களிலும் வெளியாகி வருகின்றன. தமிழ் திரைப்படங்களுக்கு திரைக்கதை வசனம் எழுதி வருகிறார்.

“மணிரத்னம் படைப்புகள் ஓர் உரையாடல்” என்ற மொழிபெயர்ப்பு நூல் கிழக்கு பதிப்பக வெளியீடாக வந்துள்ளது. உயிர்மை மற்றும் சுஜாதா அறக்கட்டளை வழங்கும் சுஜாதா விருது அண்மையில் இவரது இணையதளத்திற்கு கிட்டியுள்ளது.

இவரது இணையதளம்

www.aravindhskumar.com